Registered as a news paper.
இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்
(சி-648)
(1962 முதல் யாழ். வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 12 (16.03.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் :164

கிழக்கிலிருந்து வன்னி புறப்படும் கேணல் கருணா...





## தளபதிகள் கருணா, பதுமன் ஹெலி மூலம் வன்னி வந்தனர்

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறைத் தளபதி கேணல் கருணா விசேட ஹெலிகொப்ரர் மூலம் வன்னிக்குச் சென்றுள்ளார்.


பளுகாமம் கண்டுமணி வித்தியாலயத்தில் இருந்து நேற்று இவர் வன்னியைச் சென்றடைந்தார்.

இதேவேளை - திருகோணமலை மாவட்டக் கட்டளையிடும் தளபதி கேணல் பதுமனும் விசேட ஹெலிகொப்ரர் ஒன்றின் மூலம் வன்னிக்குச் சென்றுள்ளார்.

இவர் சம்பூரிலிருந்து வன்னிக்குச் சென்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# தலைவர் பிரபாவின் பணிப்பையடுத்து பேச்சுக்குப் புலிகள் இன்று புறப்பாடு!

## கிளிநொச்சியில் பாலசிங்கம் அறிவிப்பு



**ஜப்பானில் நடைபெறவுள்ள அடுத்தகட்டப் பேச்சுக்களில் பங்குபற்றுவதென விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் முடிவெடுத்திருக்கிறது.**

**'இந்தப் பேச்சுவார்த்தையைப் பகிஷ்கரித்து எமது ஆட்சேபனையைத் தெரிவிப்பதிலும் பார்க்க, பேச்சுவார்த்தையில் பங்குபற்றி நேரடியாக எமது ஆட்சேபனையைத் தெரிவிப்பதுதான் புத்திசாலித்தனமான முடிவு' என தலைவர் பிரபாகரன் தீர்மானித்துள்ளார் என -**

**விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.**

அவர் அங்கு மேலும் தகவல் வெளியிடுகையில்,

திருகோணமலை மேல் நோக்கிய ஆழ்கடலில் நடந்த சம்பவும் குறித்து எமது தரப்பில் உள்ள நியாயத்தை நாங்கள் சிங்களத் தரப்புக்கு எடுத்து விளக்கி சிங்களத் தரப்புத் தான் தவறு என்று அவர்களுக்கு எடுத்துக்கூறி இதற்கான கடுமையான ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறு தலைவர் என்னைப் பணித்திருக்கிறார்.

## பேச்சுக்களை நாம் பகிஷ்கரித்தால் எதிர்மறையான விளைவையே தரும்

இந்தப் பேச்சுவார்த்தையை நாங்கள் பகிஷ்கரிப்பதாக இருந்தால், அது எதிர்மறையான தாக்கத்தை - அதாவது, எமக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சிறிலங்கா அரசு பிரசாரங்களைச் செய்யலாம்.

இப்படியான ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள், செயறபாடுகள் நிகழ்ந்தபோதும் போர்நிறுத்தத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்து, அமைதியைப் பேணி, பேச்சுக்களைத் தொடர்வதுதான் எமது உறுதியான தீர்மானம். மக்களும் இதையே விரும்புகிறார்கள். இச்சம்பவம் தலைமைப் பீடத்தையும் எமது போராளிகளையும் உலுப்பியபோதும் நாம் மனம் தளராது, உறுதி தளராது அமைதியைப் பேணி, பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தி, எம்மால் முடிந்தளவுக்கு இப்பேச்சுக்களை முன்னெடுப்பதுதான் நல்ல செயற்பாடு எனத் தலைவர் முடிவெடுத்துள்ளார்.

## புலிகளின் பேச்சுவார்த்தைக் குழு இன்று காலை புறப்படுகின்றது

எனவே, நாளை (இன்று) நானும், தமிழ்ச்செல்வனும், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தளபதி கருணா அம்மானும் கிளிநொச்சியிலிருந்து காலை 11 மணிக்குப் புறப்படுகிறோம். கொழும்பு சென்று அங்கிருந்து நாளை மறுதினம் (நாளை) இரவு 9 மணியளவில் விமானம் மூலம் நேரடியாக ரோக்கியோ செல்கிறோம்.

அங்கு 4 நாட்கள் பேச்சு நடைபெறும். இந்தப் பேச்சுக்களின்போது பிரதான விடயமாக, கடற்படையினரின் யுத்த நிறுத்த மீறல்களும், இதனால் எழுந்துள்ள சிக்கலான நிலைமை பற்றியும் அங்கு விவாதிக்கப்படும்.

## இயல்புநிலை திரும்பினாலே பேச்சில் முன்னேற்றம் வரும்

பொதுவாக, உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை இன்னும் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவில்லை. அநேகமாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்க முன்பாக, ஜெனரல் நம்பியாரின் அறிக்கை வெளியிடப்படும் என்று கூறப்படுகிறது. ஆனால், இது எந்தளவு உண்மை என்று தெரியாது. நம்பியாரின் அறிக்கை வெளியாவது பின்போடப்பட்டு வருவதை நாம் விரும்பவில்லை. ஏனெனில், உயர்பாதுகாப்பு வலயத்தின் உள்ளும், வெளியும் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேற்றப்பட வேண்டும். இதுபற்றி வலியுறுத்தி நாம் பேசவுள்ளோம். மக்கள் தமது சொந்தக் குடியிருப்புக்களுக்குச் செல்லாமல் இயல்புநிலை தோன்றப் போவதில்லை. இயல்புநிலை தோன்றாமல் அமைதி நிலை ஏற்படாது. அமைதி இல்லாது பேச்சில் முன்னேற்றம் வராது. மக்களுக்கு அமைதி, இயல்புநிலை இல்லாது சித்தாந்தம் பேசிப் பயனில்லை. கோட்பாடுகள் ஆராய்வதிலும் பயனில்லை. எனவே, மக்களின் நாளாந்த பிரச்சினைக்குத தீர்வு காணவேண்டும். இதை இப்பேச்சுக்களில் வலியுறுத்துவோம். (10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியற்துறைப் போராளிகள் திரும்பிக்கொண்டிருக்கின்றனர்

வன்னிக்கு அழைக்கப்பட்ட அரசியற்துறைப் போராளிகள் மீண்டும் அவர்கள் பணியாற்றிய இடத்துக்குத் திருப்பி அனுப்பப்படுவதாக நேற்று அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறும்போது,

போராளிகளை நாம் திருப்பி வன்னி அழைத்தபோது அரசும், ஜனாதிபதியும், படைகளும், புலிகள் ஏதோ தாக்குதலை நடத்தப் போகின்றனர் எனப் பதற்றம் அடைந்தனர். இதனால் சில அச்சுறுத்தல்களைச் செய்துள்ளனர். நாம் யுத்தப் பிரகடனம் செய்ய விரும்பவில்லையென இப்போது அவர்களுக்குப் புரிந்துள்ளது. பேச்சு நடக்கும், போர் நடக்காது என்று தெரிந்ததும் இப்படியான பதற்றநிலை குறையும். இராணுவம் தனது அச்சுறுத்தல்களை நிறுத்தும் என எதிர்பார்க்கின்றோம். போராளிகள் தற்போது தமதிடங்களுக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர் - என்றார்.

## அரசின் கருத்துக்கள் மீது புலிகள் கடும் அதிருப்தி!

### பாதுகாப்பு அமைச்சருக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் மீதான, கடற்படையினரின் தாக்குதல் குறித்த கண்காணிப்புக் குழுவின் அறிக்கையை நாம் எதிர்பார்த்திருக்கின்ற அதேவேளை, கடற்படையினரின் இத்தகைய விதிமுறைகளை மீறிய தாக்குதலை, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கடுமையாக மீறிய செயலாகவே நாம் கருதுகின்றோம் என, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு நேற்று அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

சர்வதேசக் கடலில் எமது வர்த்தகக் கப்பல் மீது, இலங்கைக் கடற்படை கண்மூடித்தனமாக நடத்திய தாக்குதலை நியாயப்படுத்திய உங்கள் கருத்துக்கள் குறித்து, நாம் எமது அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்கிறோம். கடற்படை அதிகார பீடத்தினால் (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



சர்வதேச கடலும் தங்கட கொல்லைக்க எண்டதுதான் கடற்படை நினைப்பு..!

## நோர்வேயின் பணியில் எவ்வித மாற்றமுமில்லை

### விதார் ஹெல்கிசன் தெரிவிப்பு



இலங்கையின் சமாதான முயற்சியில் நோர்வே அரசின் பங்களிப்பில் எந்தவித மாற்றமும் இல்லையென நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்துள்ளார். இலங்கையின் சமாதானத்துக்காக நோர்வே தன்னை அர்ப்பணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சமாதான முயற்சியில் நோர்வேயின் பங்களிப்பை சில (10 ஆம் பக்கம் பார்க்க)

நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
பிரபு, வைஜயந்தி நடித்த
வண்ணத்தமிழ் பாட்டு
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
RUSH HOUR - 2
(சி-627)

ராஜா யாழ்ப்பாணம்.
காசி புகழ் விக்ரம், லைலா, விவேக், வையாபுரி, நாசர் நடித்த
தில்
நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30 காட்சி
(சி-628)

சின்னஞ்சிறு விளம்பரம்
HARRIS OFFSET
HARRIS 125 OFFSET PRINTING MACHINE உடன் விற்பனைக்கு உண்டு. SIZE:- 19'X25 ITALIAN MADE தொடர்பு:- 103, சென்பெனடிக் மாவத்தை, கொழும்பு - 13. T.P.:- 01-324095 (சி-686)


# பாடசாலை மாணவருக்கான சீருடைத்துணி விநியோகம்

யாழ்ப்பாணம் பிரதேசசெயலர் பிரிவைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத்துணி விநியோகம் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் யாழ்.ப.நோ.கூ.சங்கத்தின் கிளைகள் மூலம் நடைபெறும். கடந்த வருடம் டிசம்பர் 30 ஆம் திகதி வரை விண்ணப்பித்த மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் தத்தம் பிரிவு கிராம அலுவலர்களிடம் சீருடைத்துணி முத்திரைகளைப் பெற்று, குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் சீருடைப் பொதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

ஜே-84, ஜே-85, ஜே-86, ஜே-87, ஜே-88 ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு கிளை இல: 01 நாவாந்துறை தெற்கிலும், ஜே-81, ஜே-82, ஜே-83 பிரிவுகளைச் சேர்ந்தோருக்குக் கிளை: 07 வெள்ளாந்தெருவிலும், ஜே-78, ஜே-79, ஜே-80 பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு கிளை இல: 15 ஆரியகுளத்திலும், ஜே-61, ஜே-62, ஜே-63 சேர்ந்தோருக்கு கிளை 125 புங்கன்குளத்திலும், ஜே - 64, ஜே-65, ஜே-66, ஜே-75 ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு கிளை இல. 125 ஈச்சமோட்டையிலும், ஜே-76, ஜே-77 பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு கிளை இல 27 சுண்டுக்குளியிலும், ஜே-73, ஜே-74 பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு கிளை இல. 28 ஸ்ரேசனடியிலும், ஜே-67, ஜே-68, ஜே-69, ஜே-70, ஜே- 71, ஜே-72 பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு கிளை இல. 32 குருநகரிலும் சீருடைத் துணிகள் விநியோகிக்கப்படும்.

# 31 ஆம் நாள் நினைவலைகள்



அன்னை மடியில்
12
11
1997

எங்கே போனாய் (?)
14
02
2003

## செல்வன் ரவீந்திரா சுவந்திரன் (குட்டி)

### பெற்றோரின் இரத்தக்கொதிப்பு

*துர்க்கையம்மன் அருள் மைந்தனே!*

எம்முதிரத்தில் உதித்த உத்தமனே அருகிருப்பாயென நினைத்திருந்த அன்னையிடம் பிரித்து இருப்பிடமே இல்லாது திகைத்து நின்ற வேளையதில் நிலையாக இருத்திவிட்டு.
ஆசையுடன் அண்ணாவும், தம்பியும் அருகிருந்து விளையாட கண்ணூறு பட்டதுவா உனக்கு.
அன்புடன் அப்பாவென்றழைத்து அதிகாரமில்லாது அப்பாவியாக அடக்கிவிட்டு, அன்னையுடன் அன்னையாக அக்காவாய் நின்றவளைத் தியக்க வைத்து
பேரன்புடன் பேரவாகக் கொள்ள வைத்த பேரன் பேர்த்திகளை பேரடியாக்கி, வளமான எதிர்காலம் வசமாக உன்கையில் வருமென்று வழிகாட்டிகளாக நின்ற நல்லாசிரியர்களுடன் நலமாய் வாழ்விட மறுத்ததுவே!
பெயரும் புகழுடன் வாழ்வாயென பெரிதாக நினைத்திட்ட பெரியப்பாக்களுடன் பெரியம்மாக்களும் இடிகேட்டு இடிந்து நிற்க.
சிறிய துன்பங்களையும் உன்னை அனுகாமல் பாதுகாத்த சித்தப்பாக்களுடன் சித்தியர்களும் சிலையாக்கி விட்டு
மயக்க வைக்கும் மர்மக் கதைகள் பல சொல்லும் உன் விழியினைக் கண்ட மாமாக்களுடன் மாமிமார்களும் மலங்க வைத்து,
உடன் பிறவாச் சகோதர சகோதரிகளிடம் சலனமின்றி நீர் சரிந்திட்ட செய்தி சலனமாக்கி விட்டதடா நெஞ்சமதை.
குட்டி குட்டி எனக் குடும்பத்தினை ஒளியாக்கி இருந்து விட்டு ஒளி மங்கவைத்துப் பந்தங்களைப் பயப்பிட வைத்திட்டாய்.
ஓர் உந்துதலில் உம்மிடத்தில் நட்பு வைத்த பெரியோர்களை நண்பர்களை நலிய விட்டு
அன்புடன் அத்தையென நீர் அழைக்கும் செய்தி கேட்டு ஓடி வரும் அத்தைகளை அஞ்ச வைத்ததுவோ இச்செய்தி.
பள்ளியில் பல தோழர்களுடன் தோழமையால் நீர் நின்ற கோலமதைக் காண குலதெய்வம் முருகனுக்கே பொறுக்கவில்லை, உன் அண்ணாவின் அதிரவைத்த அழுகுரல் கேட்டு அக்காவும் உடன் வந்து உன்னைப்பார்க்க முடியாமல் நடுங்க வைத்த காட்சியினை நடுவழியே வந்த அந்த மனித நேய நெஞ்சங்களை துணைகொண்டு உயிர் காக்க நினைத்தவளை நிலை குலைய வைத்துவிட்டு நீர் போன இடமெங்கே?
மதுவிலும் கொடிய விஷம் வேறுண்டோ என அறிந்திராத மனித நேயமற்ற மது அரக்கன் யமனாகப் பின் தொடர்ந்து எம்மிடமிருந்த உம்முயிரைப் பிரித்து விட்ட கதையொன்று உண்மையாகி விட்டதடா! பாசமுடன் பார்த்திருந்த பந்தங்களைப் பாவியாக்கிப் பறந்திட்ட சுவந்திரனே!
சட்டம் நல்ல முடிவைக் கூறும் எனப் பார்த்து விழிகள் மூடிடாமல் பகலிரவாய் ஈரவிழிகளுடன் ஏங்கி நிற்கும் சொந்தங்கள் இங்கு வாடுதய்யா உன்வரவை எண்ணி!...?...

*முகவரி:-*
***மாரீசன்கூடல்,***
***இளவாலை.***

(283)

**பாசஉறவுகள்**
**ரவீந்திரா, சுசிலாதேவி.**

# இன்றைய நாள் இனிய நாள்

**16-03-2003 - ஞாயிற்றுக்கிழமை**


| | |
|---|---|
| **மேடம்** | :- போசன நிறைவு, பலவித பொருட்பேறு, பெரியோர் மதிப்பு, வாகன சுகம், தொழிற்சிறப்பு. |
| **இடபம்** | :- பயனற்ற பிரயாசம், ஏமாற்றமடைதல், கோபமிகுதி, குடும்பசுகம், தருமகாரிய செலவு. |
| **மிதுனம்** | :- களஸ்திர மகிழ்ச்சி, தொழில் விருத்தி, தேக நலக்குறைவு, பொருட்செலவு. |
| **கர்க்கடகம்** | :- இனசனக் கவலை, பிரயாசத்திற்கேற்ற பலனின்மை, வாகன நஷ்டம், அவமானம். |
| **சிங்கம்** | :- வாக்கு வசீகரம், தேக பலவீனம், தாரபுத்திர கவலை, சிநேக லாபம், பொருள்விருத்தி. |
| **கன்னி** | :- அதிக பிரயாசை, புத்திரர் மூலம் மகிழ்ச்சி, தாரபுத்திரருக்கு ரோகபீடை, அக்கினி பயம். |

**பிரபல சோதிடர்**
**எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| **துலாம்** | :- விஷபயம், தேக மெலிவு, கீழ்ப்படிதல், பிரயாண கஷ்டம், பணப்பற்றாக்குறை. |
| **விருச்சிகம்** | :- வயிற்றில் ரோகபயம், வரும்பியவை தடைப்படுதல், தொழிற்சிறப்பு, தனதானிய விருத்தி. |
| **தனு** | :- காரிய விக்கினம், பொருள் வரவு, இனசன கொண்டாட்டம். |
| **மகரம்** | :- தொழில் விருத்தி, அதிகபிரயாசை, கோபமிகுதி, புத்திரரால் மகிழ்ச்சி. |
| **கும்பம்** | :- ரோகபயம், கெட்ட சகவாசம், காரிய தாமதம், குடும்ப மகிழ்ச்சி. |
| **மீனம்** | :- நன்மதிப்பு, சரீர ஆரோக்கியம், குடும்ப அனுகூலம், சிநேகலாபம், பொருள்வரவு. |

# 31 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்
18
-
04
-
1937



மறைவு
14
-
02
-
2003

## இளையகுட்டி நீக்கிலாஸ் இராசு

"குத்து விளக்கு" திரைப்படத்தில் ஒளிவீசினாய்.
"ஏமாந்த மாமா"வில் நளினம் காட்டினாய்.
"உலகம் சிரிக்கிறது" என்று நாமும் சிரித்தோம்
"ஒருதாயின் பரிசு" கண்டு வயிறு குலுங்கி வெடித்தோம்
இப்படி எத்தனை கலைகளை
அள்ளித்தந்த எங்கள் அப்பாவே!
உங்கள் அன்புச் செல்வங்களை
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
சுற்றமொடு அயலாரும்
நெஞ்சுருகி வருந்தி நிற்க!
உற்ற உன்துணை மனையாள்
வெம்பி வெடிக்க
இத்தனையும் மறந்து போயினவோ!
சென்றதையா 31 நாட்கள்
உம்மை நாம் மறப்போமா?

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி :- நீ.மேரிதிரேசா
மக்கள் :- நீ.இனதாஸ் (கனடா)
நா.பத்திமா
காலஞ்சென்ற நீ.ரமேஸ்
நா.ஜெயலலிதா (கனடா)
நீ.வனிதா
நீ.ஸ்ரீதேவி
மருமக்கள் :- சி.நாகேந்திரன்
சி.நாகதாஸ் (கனடா)
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

*12/14 கென்னடி வீதி,*
*நாவாந்துறை,*
*யாழ்ப்பாணம்.*

(279)

# நிவாரணத்துக்கு உள்ளூர் அரிசி; கொள்வனவு செய்ய அங்கீகாரம்!

இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவச உலர் உணவு விநியோகத்துக்குத் தேவையான அரிசியை உள்ளூரிலேயே கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதுவரை காலமும் புனர்வாழ்வு அமைச்சின் மூலமாகவே மேற்படி அரிசி விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது இந்த நடைமுறை நிறுத்தப்படவுள்ளது. இதற்குப் பதிலாகவே இப்புதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும் மேற்படி அரிசி கொள்வனவு செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக இக் கொள்வனவுகள் நடைபெறவுள்ளது.

எனினும், இவ்வாறு கொள்வனவு செய்யப்படுகின்ற அரிசிக்குரிய விலையை - மாவட்ட மட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் விலைநிர்ணயக்குழு தீர்மானிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.


மேற்படி அமைச்சரவையின் முடிவு காரணமாக வடபகுதி விவசாயிகள் தமது உற்பத்திகளுக்கு நியாயவிலையைப் பெற்றுக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் உருவாகியுள்ளது.

அத்துடன், உள்ளூரில் அரிசியைக் கொள்வனவு செய்வதால் குறைந்த விலைக்கு அதனை விநியோகிக்க முடியும் என்றும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாளும் நடப்பும்

*அண்மைக்காலமாக இராணுவத்தினர் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறி வருகின்றனர்!!*

*-செய்தி-*




# உலக நாடாளுமன்ற அமைப்பு அமைதி முயற்சிகளுக்கு ஆதரவு

உலக நாடாளுமன்றங்களின் அமைப்பு- இலங்கையில் நடைபெறும் சமாதான முயற்சிகளுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

ஜெனிவாவைத் தலைமையகமாகக்கொண்ட இந்த அமைப்பின் செயலாளரான அன்றூ பி.ஜோன்சனை- இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே இந்த ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன தலைமையிலான 11 பேர் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவே, உலக நாடாளுமன்றங்களின் அமைப்புச் செயலாளரைச் சந்தித்துப் பேசியது. இக்குழு சுவிற்சர்லாந்தின் சமஷ்டி அமைப்பு முறை குறித்து ஆராயச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகத்துறை அமைச்சை ஜனாதிபதி கையேற்க வேண்டுமென வலியுறுத்து

## பொ.ஐ.முவுக்குள் கோரிக்கை வலுக்கிறது

(கொழும்பு)

ஊடகத்துறை அமைச்சை- ஜனாதிபதி சந்திரிகா தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் கோரிக்கை வலுத்துள்ளது.

அண்மையில் அரசாங்கத்துக்கு எதிராகவும, அமைதி முயற்சிகளுககு எதிராகவும் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி ஆகியன இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி தொடர்பான செய்திகள், அரச ஊடகங்களில் சரியாகச் சொல்லப்படவில்லை என்று இக்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

அரச ஊடகங்கள்- மக்களுக்குத் தவறாக தகவல்களைச் சொல்வதாகவும், இதனைத் தடுப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஊடகத்துறை அமைச்சைத் தனது கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டுவர வேண்டும் என்றும் கோரிக்கைகள் வலுவடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இராணுவத் தலைமையக உணவு விடுதியில் தினமும் சாப்பிட்டுவந்த போலி அதிகாரி!

(கொழும்பு)

இராணுவ அதிகாரியின் சீருடையுடன், இராணுவத் தலைமையகத்துக்குள் சென்று, உணவுவிடுதியில் தினமும் சாப்பிட்டுவந்த நபர் ஒருவர் வகையாக மாட்டிக்கொண்டார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

தன்னை கஜபா றெஜிமென்ட்டின் கப்டன் என்று சொல்லிக்கொண்டு, இராணுவத் தலைமையக உணவுவிடுதியில் இந்தநபர் தினமும் சாப்பிட்டு வந்தார். இராணுவ சீருடையில் இவர் இரண்டு வருடமாக இந்த ஏமாற்று வேலையைச் செய்து வந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு போலியான இந்த இராணுவ அதிகாரியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவருடன் தொடர்பை வைத்திருந்த இராணுவ அதிகாரிகளையும் பொலிஸார் விசாரித்து வருவதாகத் தெரியவருகிறது.

# நோபல் இன்ஸ்ரிரியூட்டில் பேசுவதற்கு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அழைப்பு

(கொழும்பு)

ஒஸ்லோவிலுள்ள நோபல் இன்ஸ்ரிரியூட்டில் உரைநிகழ்த்த வருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

நோர்வேயின் அரசரான ஹெரோல்ட் இந்த அழைப்பை விடுத்துள்ளார். நோர்வே அரசரின் அழைப்புக்கடிதம் அண்மையில் கொழும்பு வந்த பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனால்- ஜனாதிபதி சந்திரிகாவிடம் நேரில் கையளிக்கப்பட்டது.

நோர்வே அரசரின் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா, உடனடியாகத் தன்னால் நோர்வேக்கு விஜயம் செய்ய முடியாதுள்ளதாகவும், சிறிது காலத்திற்குப் பின்னர் அங்கு விஜயம் செய்வதாகவும் விதார் ஹெல்கிசனிடம் உறுதியளித்துள்ளார்.

# புலிகள் ஏவுகணைகளைக் கடத்த முயற்சி செய்து வருகிறார்களாம்!

## சரத் அமுனுகம கூறுகிறார்

(கொழும்பு)

விமான எதிர்ப்பு ஏவுகணைகளை இலங்கைக்குள் கடத்தும் முயற்சியில் புலிகள் ஈடுபட்டிருப்பதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான சரத் அமுனுகம தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் ஆர்வம்காட்டவில்லை. அவர்கள் ஆயுதங்களைக் கடத்துவதில்தான் அக்கறையாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கை சின்னத்தில் போட்டியிட்டாலே பொ.ஐ.முவுக்கு வெற்றி கிடைக்கும்

## அனுரா பண்டாரநாயக்க கூறுகிறார்



அடுத்து நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்தும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ‘கை’ சின்னத்திலேயே போட்டியிட வேண்டுமெனப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் பொதுஜன ஐக்கிய முன்னணி, பொதுவான சின்னமான- கதிரைச் சின்னத்திலேயே போட்டியிட்டது. கதிரைச் சின்னத்தில் இனிமேலும் போட்டியிட்டால் வெற்றிபெற முடியாது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாரம்பரிய ‘கை’ சின்னத்தில் போட்டியிட்டாலேயே பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வெற்றி கிடைக்கும்.

இதற்கு முன்னணியில் உள்ள ஏனைய கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். சுதந்திரக்கட்சியின் கிளைப் புனரமைப்புக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் 22 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்ட இறுதிப்போட்டி- இன்று பி.ப. 4.30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஊரெழு- றோயல் விளையாட்டுக் கழகமும், நாவாந்துறை- கலைவாணி விளையாட்டுக்கழகமும் இந்த இறுதியாட்டத்தில் மோதவுள்ளன.

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் உபதலைவர் பெஞ்சமின் ஜேக்கப் இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

# இலங்கை வரும் ஈராக் பிரஜைகள்; அவதானமாக இருக்க அறிவுறுத்து!

(கொழும்பு)

ஈராக்கிலிருந்து இலங்கை வருவோர் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அமெரிக்கா கேட்டுள்ளது.

கொழும்புக்கு வந்த மூன்று ஈராக்கிய இராஜதந்திரிகள் காணாமற்போய்விட்டதாகச் செய்திகள் வெளியானதையடுத்தே அமெரிக்கா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பப்பட்ட இந்தக் கோரிக்கை குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

தலைமறைவானதாகக் கூறப்படும் மூன்று ஈராக்கிய இராஜதந்திரிகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும்படியும், ஈராக்கிய பிரஜைகள் குறித்து அவதானமாக இருக்கும்படியும் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# சாரதிகளுக்கான பரீட்சையால் ரயில் சேவைகள் ஸ்தம்பிதம்!

நேற்று ரயில் சேவைகள் பெருமளவில் ஸ்தம்பிதமடைந்தன. இந்த நிலை இன்றும் தொடரும் என்று ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ரயில் சாரதிகளுக்கான தடைதாண்டல் பரீட்சை நேற்றும், இன்றும் நடைபெறுவதாலேயே நூற்றுக்கு மேற்பட்ட ரயில் சேவைகளை இடைநிறுத்த வேண்டியேற்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது. இப்பரீட்சையில் 98 ரயில் சாரதிகள் தோற்றுவது குறிப்பிடத்தக்கது.

## லலித் கொலை 4 சந்தேகநபர்கள் விடுவிப்பு

முன்னாள் அமைச்சரான லலித் அத்துலத் முதலியின் கொலை வழக்கில் சந்தேகநபர்களான நால்வரை- நீதிமன்றம் விடுவித்துள்ளது.

யு.எல்.செனிவிரட்ண, சோமரட்ண, இன்ஸ்பெக்டர் பி.எம்.ஜி. தேவசுந்தர, சார்ஜன்ட் ஆப்தீன் ஆகியோரையே நீதிமன்றம் விடுவித்துள்ளது.

# ஜப்பான் நிதி நிறுவனத் தலைவர் யாழ்ப்பாணம் வருவதற்குத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

நிதியுதவிகளை வழங்கும் ஜப்பானிய நிறுவனமான “ஜெயிக்கா” வின் தலைவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவிருக்கும் இவரது விஜயத்துக்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முன்னோடியாக இந்த நிறுவனத்தின் இரு அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து, குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சென்று பார்வையிட்டனர்.

யாழ். விவசாயிகளுக்கு வழங்கிய உறுதிமொழி காற்றில்?

# இந்தியாவிலிருந்து உருளைக்கிழங்கு இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விளையும் உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் என்பனவற்றைக் கொள்வனவுசெய்து விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாக- வர்த்தக நுகர்வோர் விவசாய அமைச்சர் ரவி கருணாநாயக்க உறுதியளித்த போதும், இந்தியாவிலிருந்து உருளைக்கிழங்கை இறக்குமதி செய்யும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து ஆறாயிரம் மெற்றிக்தொன் உருளைக்கிழங்கை உடனடியாக இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முயற்சிகள் எடுத்துவருகின்றது. உலகில் உருளைக்கிழங்கை அதிகமாக உற்பத்திசெய்யும் நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தை வகிக்கின்றது.

இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்திலேயே அதிகமாக உருளைக் கிழங்கு விளைகின்றது. பஞ்சாபில் இருந்தே இலங்கை அரசாங்கம் உருளைக்கிழங்கைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றது.

முதலில் ஆறாயிரம் மெற்றிக்தொன் உருளைக்கிழங்கைக் கொள்வனவு செய்யவும், பின்னர் மாதாந்தம் ஆயிரம் மெற்றிக்தொன் உருளைக்கிழங்கைக் கொள்வனவு செய்யவும் அரசு தீர்மானித்திருக்கின்றது.

இதேவேளை, உள்ளூரில் விளைவிக்கப்பட்ட உருளைக்கிழங்கைக் கொள்வனவுசெய்து, விற்பனை செய்வதாக அரசு உத்தரவாதம் அளித்திருந்தபோதும், அதற்கான முயற்சிகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தரம் 1 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்!

2003 ஆம் ஆண்டு தரம் ஒன்றில் கல்விகற்கும் அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் உபகரணத் தொகுதி விநியோகிக்கும் 'யுனிசெப்' திட்டத்தின்கீழ் யாழ்.வலயப் பாடசாலைகளுக்கு உபகரணத் தொகுதிகள் விநியோகிக்கப்பட்டன.

குறிப்பிட்ட திகதியின் பின்னர் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டு, இதுவரை உபகரணத் தொகுதிகளைப் பெற்றுக்கொள்ளாத தரம் 1 மாணவர்களுக்கு யாழ். வலயக் களஞ்சியப் பொறுப்பாளரிடமிருந்து எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன் உபகரணத் தொகுதிகளைப் பெற்று - விநியோகிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தென்மராட்சியில் கூட்டம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால்- தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகளுக்கு நிதி வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்குக் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும், பி.ப.2.00 மணிக்கு நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலையிலும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் கல்விக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்வதால், அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் அருகிலுள்ள நிலையத்திற்கு வருகை தருமாறு தென்மராட்சிக் கல்விவலய உதவிக் கல்விப்பணிப்பாளர் க.பாக்கியராசா அறிவித்துள்ளார்.



யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் - யாழ்.நகர் கிழக்குச் சமுர்த்தி வங்கி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. சமுர்த்தி உதவி ஆணையாளர் என். சிவபாதசுந்தரம், வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம், வங்கிக் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் அ.யேசுதாசன் ஆகியோர் வங்கி நடவடிக்கைகளைப் பார்வையிடுவதையும், கிராமசேவையாளர்கள், சமுர்த்தி முகாமையாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.



அண்மையில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, கன்னியர் மடம் மகா வித்தியாலயம் ஆகியன இணைந்து நடத்திய இல்ல மெய்வல்லுநர் போட்டியில்- வெற்றிபெற்ற மாணவர் ஒருவருக்குப் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (71)

## சின்னஞ் சிறு செய்திகள்

### போயா தின ஆன்மீக நிகழ்வுகள்

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவாநிலையத்தில் போயாதின ஆன்மீக நிகழ்வுகள் நாளை மறுநாள் அதிகாலை 5.00 மணிக்கு- நகரசங்கீர்த்தனத்துடன், ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

### 1997 இற்குப் பின்னர் முத்திரையிடும் பணி

1997 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நெடுந்தீவில் நிறுத்தல், அளவைகள் கருவிகளுக்கான முத்திரையிடும் பணி கடந்த 13 ஆம், 14 ஆம் திகதிகளில் இடம்பெற்றது. இதன்போது, 30 இற்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்களின் நிறுத்தல், அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடப்பட்டன.

### விபத்தில் காயம்

(மீசாலை)

மீசாலை புதிய ரயில் நிலையப் பகுதியில், ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஓட்டோ விபத்தொன்றில் படுகாயமடைந்த இருவர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு, பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

சின்னத்துரை ஜெயகுமார் (வயது 35), யோகதாசன் நிரோஜன் (வயது 13) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

### வடமராட்சி வலய கரப்பந்தாட்டப் போட்டி

(நவிண்டில்)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நாளையும், நாளை மறுநாளும் காலை 8.30 மணிமுதல் வடமராட்சி வலயமட்டக் கரப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

15 வயதினருக்கான போட்டி-9 பாடசாலைகளுக்கிடையிலும், 17 வயதினருக்கான போட்டி- 12 பாடசாலைகளுக்கிடையிலும், 19 வயதினருக்கான போட்டி- 10 பாடசாலைகளுக்கிடையிலும் நடைபெறவுள்ளது.

மொத்தமாக 66 போட்டிகள் நடைபெறவுள்ளன. இரண்டாவது சுற்றுப் போட்டிகள் விலகல் முறையில் நடைபெறுமென வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் கூறினார். (116)

# உயர்தொழில்நுட்ப மாணவர் பருவகாலச் சீட்டு நிறுத்தம்!

(சரசாலை)

உயர்தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த போக்குவரத்துப் பருவகாலச் சீட்டுக்கள் யாவும் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையால் அண்மையில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதனால், யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் கற்கைநெறிகளை மேற்கொள்ளும் 800 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு வழங்கவேண்டிய பல லட்சம் ரூபா நிலுவையைக் கொழும்பு உயர்தொழில்நுட்ப நிறுவனம் செலுத்த தவறியதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (34)

## யுத்தத்தால் மடுமாதா ஆலயத்திற்கு 50 இலட்சம் ரூபா சொத்து இழப்பு!

(மன்னார்)

மன்னார்- மடுமாதா தேவாலயத்திற்கு யுத்தத்தினால் 50 இலட்சம் ரூபா சொத்து இழப்பு ஏற்பட்டுள்ளதாக மடுத்தேவாலய அருட்தந்தை பிலிப் தெரிவித்துள்ளார்.

1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இராணுவத்தினர் இத்தேவாலயம் மீது மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களாலும், முன்னர் படையினர் மடுமாதா தேவாலயத்தில் நிலைகொண்டிருந்த வேளையில் மடுத்தேவாலயத்தைச் சூழவிருந்த மரங்கள் யாவும் படையினரால் தறித்து அழிக்கப்பட்டுள்ளதாலும் இவ்விழப்பு ஏற்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மீசாலை சந்தியிலுள்ள படைமுகாமை பலப்படுத்தும் முயற்சியில் படையினர்!

மீசாலைச் சந்தியை அண்மித்த பகுதியிலுள்ள இராணுவத்தினரின் படைமுகாம் பலப்படுத்தப்பட்டு வருகின்றது.

முன்பு இப்படைமுகாம் எதுவித பாதுகாப்பு வேலிகளுமின்றி இருந்தது. படையினர் தற்போது தமது முகாமைச் சுற்றி முட்கம்பி வேலிகளை அமைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இப்படைமுகாமிற்கு அருகில் வசிக்கும் மக்கள் -முகாம் பலப்படுத்தப்படுவதையிட்டு அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு வருடம் கடந்த நிலையிலும், இன்னமும் படையினர் மக்கள் குடியிருப்புக்களையும், தேவாலயங்களையும் விட்டு வெளியேறாது- படைமுகாம்களை மேலும் பலப்படுத்தி வருவது மக்களிடையே அச்சவுணர்வை ஏற்படுத்தி வருகின்றது.

### வைக்கோலுக்குக் கிராக்கி

தென்மராட்சி பிரதேசத்தில் தற்போது வைக்கோலிற்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இராணுவத்தினர் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களில் நெற்செய்கையை மேற்கொள்ளத் தடைவிதித்ததால் நெற்செய்கை தடைப்பட்டது.

இப்போது மக்கள் இப்பகுதிகளில் மீளக்குடியமர்ந்ததுடன், மீளவும் விலங்குப் பண்ணைகளை ஆரம்பித்துள்ளனர். இதனால் தற்போது வைக்கோலுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதுடன், விலையும் கணிசமாக அதிகரித்துள்ளது.

### பூச்சி நாசினி தெளிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிப் பகுதியில் தென்னைகளில் "மைற் நோய்" மீண்டும் பரவத்தொடங்கியுள்ளது. இதையடுத்து வடமராட்சிப் பகுதியில் வீடு வீடாக கமநலசேவை கேந்திர நிலையத்தினால் வழங்கப்பட்டு வரும் கிருமிநாசினி தெளிக்கப்பட்டு வருகிறது. (17)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

1/2

ஏழாவது அகவையில்

பெயர் : கு.சாருஜன்

முகவரி : வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்


சிறாரின் பெயர்: ..........

முகவரி :..........

பிறந்த ஆண்டு:..........

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றார். ஒப்பம்



# லீ எனும் ஏவுகணை

'ஒரு விக்கெட்டை வீழ்த்தத் தேவையானது துடுப்பாட்ட வீரரின் தலைதான் என்றால், அதை வீழ்த்துவதில் தவறில்லை'. இதனைக் கூறி இருப்பவர் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங். இது உலகக் கிண்ணப்போட்டி. இங்கு வெற்றி முக்கியம். எனவே நபரை நோக்கிய பந்து வீச்சு தவறல்ல. இதனையே சனத் ஜயசூரியாவை நோக்கி பிரெட் லீ செய்தார். முதல் பதினைந்து ஓவர்களில் நூறு ஓட்டங்கள் என்ற கொள்கையுடன் வருபவர் சனத். அவர் COVER திசையூடாக நான்கு நான்காக அடிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. துடுப்பாட்ட முறையிலும் நாங்கள் மிகக் கவனமாக இருந்தோம். சமிந்த வாஸ் முன்னைய ஆட்டங்களில் ஊடுருவல்கள் செய்ததை நாங்கள் நன்றாக அவதானித்தோம். இதனால், சமிந்த வாஸின் ஓவர்களைக் கவனமாகக் கையாண்டோம். அதன்பின் ஓட்டங்கள் குவிப்பதில் அப்படி ஒன்றும் கஷ்ரம் இருக்கவில்லை. பின்னர்

**- நிர்மலன் -**

விக்கெட்டுகள் கைவசம் இருந்ததால் சுழற்பந்துவீச்சாளர்களைச் சமாளிப்பதில் எவ்வித தயக்கமும் எங்களுக்கு இருக்கவில்லை. இலங்கையுடனான ஆட்டத்தில் ஒரேயொரு சந்தர்ப்பம்தான் நெருடலாக அமைந்தது. அது கில்கிறிஸ்ட் 99 இல் ரன் அவுட் ஆகியது. இதுகூட அவ்ரின் தவறுதான். அதனைவிட வேறெந்தத் தவறும் இலங்கை அணிக்கு எதிராக நாங்கள் விடவில்லை. ஆட்டத்துக்கு முன்னமே நாங்கள் நிறைய விடயங்கள் கதைத்தோம். சாதக பாதகங்களை விவாதித்தோம். அதன் பின்னரே களத்தில் இறங்கினோம். இலங்கை அணியின் பலம், பலவீனம் கண்டு அதற்கான சரியான நடவடிக்கைகளை எடுத்தோம், வென்றோம் என்கிறார் ரிக்கி பொன்டிங். இலங்கை அணி சில சந்தர்ப்பங்களில் மீண்டும் அவுஸ்திரேலிய அணியைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். அவ்வகையில் அவுஸ்திரேலிய அணி எந்தெந்த வியூகங்களை வகுக்கின்றதோ, அதேபோல இலங்கை அணியும் வியூகம் வகுக்காமல் விடாது. அந்தநிலை ஏற்படும்போது இலங்கை அணியில் விளையாடப் போகும் வீரர்கள் யார்? யார்? மத்திய வரிசை எவ்வாறு அமையப் போகிறது. பந்துவீச்சாளர்கள் யார்? என்பதெல்லாம் அவசியம். இதே வேளை, அரவிந்தவினால் - லீக்கு அடிக்க முடியுமெனில், இலங்கை அணியின் ஏனைய வீரர்களால் ஏன் முடியாது என்ற வினாவும் முக்கியமானது. பொறுத்திருந்து பார்ப்போம்.






# பொண்டைப் பிடிக்கமுடியாது

வேகப்பந்துவீச்சாளர் ஷேன் பொண்டை, இந்திய அணித்தலைவர் கங்குலி புகழ்ந்து தள்ளுகிறார். அதே வேளை, யாரும் எதிர்பாரதவிதமாக அவரை நியூசிலாந்துப் பொலிஸார் தேடுகிறார்கள். தேடப்படும் ஷேன் பொண்ட் எப்படி இவ்வளவு பகிரங்கமாகத் தென்னாபிரிக்காவில் நிற்க முடியும். இந்தத் தேடல் வேறு வகை. பொண்டுக்கு PARTY வைக்கத்தான் பொலிஸார் தேடுகிறார்கள். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 1 - 2 - 3 - 4 - 7 - 8 என்ற வரிசையில் ஆறு விக்கெட்டுக்களை 23 ஓட்டங்களுக்குச் சாய்த்தாரே. அதற்காகத்தான் PARTY. ஏனென்றால், நியூசிலாந்துப் பொலிஸ்துறையில்தான் ஷேன் பொண்ட் கடமையாற்றுகின்றார். நீண்டநாள் லீவு பெற்றுக்கொண்டு தென்னாபிரிக்காவுக்கு வந்தது வீண்போகவில்லை என்று சந்தோஷப்படுகின்றார். இவரது அதிசிறந்த, அதேவேளை நியூசிலாந்தின் ஒருநாள் சாதனைப் பந்துவீச்சு இதுதான். இருந்தும் ஒரு கட்டுப்பாடு நிறைந்த பொலிஸ்காரர் என்ற வகையில் தன்னை இவர் சலனப்படுத்திக் கொள்ளவில்லை. எனது ரோந்துப்பணிகள் - கள்வர், காடையர், பிரேதங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு எனக்கு நிறையப் பணிவைக் கற்பித்துள்ளது என்கிறார் இந்த 27 வயது இளைஞர்.

இவர் 1999 - 2000 இல் தனது பொலிஸ் பயிற்சிக்காக அந்தப்பருவக் கிரிக்கெட் ஆட்டத்தை விட்டவர். இந்த உலகக் கிண்ணப்போட்டிகளில் கனவு நாயகன்களாக, திறமை சாலிகளாக ரசிகர்கள் மனதில் மேலெழுந்து நிற்பவர்கள் பலர். அவர்களில் ஷேன் பொண்டும் ஒருவர். தத்தித் தத்தி உயரவோ KIWI பறவையே!

**- நிம்மி.**

# பாடசாலைமட்டக் கணிப்பிடா ஐயோ!







டெஸ்ட் அந்தஸ்த்து பெறாத நாடுகள் அநேகம், ICC இல் அங்கத்துவம் பெற்ற நாடுகளாக உள்ளன. பத்து நாடுகளே டெஸ்ட் அந்தஸ்த்து பெற்றவை. டெஸ்ட் அந்தஸ்த்து பெறாத நாடுகள் 74 உள்ளன. இந்த நாடுகளையும் கிரிக்கெட் ஆட்டத்தின் உயர்தரத்துக்குக் கொண்டுவரவேண்டுமாயின், புதிய நடவடிக்கைகள் நிறைய மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே இவர்களுக்கான பல்வேறு திட்டங்களை ICC முன்வைத்திருக்கிறது.

இதில் முக்கியமானது திட்டமிட்ட, தொடர்ச்சியான, தரம் கூடிய கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் இந்நாடுகளைப் பங்குகொள்ள வைக்க ICC தீர்மானித்துள்ளது. இவை ICC இன் WCQS என்று அழைக்கப்படும். இந்த ஆட்டங்கள் இரண்டு வருடச் சுற்றில் பூகோளப் பிராந்தியப் பிரிவு அடிப்படையில் நடைபெறும். அதாவது, மேற்படி நாடுகள் சமபலமுள்ள அணிகள் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்படும். இவற்றின் இடையே நடைபெறும் சுற்றுப் போட்டிகள் மூலம், இவற்றின் தரயுயர்ச்சி கருத்திற்கொள்ளப்பட்டுக் கணிக்கப்படும்.

இந்த வகையில், 2003 உலகக் கிண்ணத்தில் கலந்துகொண்ட கனடா, ஒல்லாந்து, நமீபியா, கென்யா, UAE (ஐக்கிய அரபு எமிரேட்ஸ்), ஸ்கொட்லாந்து என்பன கென்யாவின் நைரோபியில் சந்திக்க இருக்கின்றன. இத்தகு போட்டிகள் தம்மை வெளிப்படுத்திக்கொள்ள நல்ல சந்தர்ப்பமாக அமையும் என்கிறது ICC.

2003 உலகக் குழுக்கள் போட்டிகள்- 27 நாடுகளுடன், 4 பிரிவுகளில் அமைந்து நடைபெறப்போகின்றன. இந்தத் திட்டச்செயற்பாடுகள் முன்னமேயே ஆரம்பிக்கப்பட்டிருக்கலாமே என்று கவலைப்படுகின்றார் ஒல்லாந்து அணித்தலைவர் லீவர் பெர் (நாற்பது வயதாகும் அவருக்கு இனிச் சந்தர்ப்பம் குறைவு தானே). தரம் குறைந்த நாடுகள் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டுமாயின் தரங்கூடிய நாடுகளுடன் கடுமையான போட்டிகளில் ஈடுபட்டு, தம்மை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்கிறார்.

இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு குழுவிலும் உள்ள நாடுகளும் - தத்தம் குழுவில் பரஸ்பரம் விளையாடி, தர வரிசைப்படுத்தப்பட்டு, தகுதிக் கணிப்புக் குட்படுவார்கள். குறிப்பிடப்பட்ட நான்காவது குழுவில் மட்டும் 9 நாடுகள் அங்கம்வகிக்கும். அதிலிருந்து 6 நாடுகள் மட்டும் அடுத்த கட்டத்துக்குத் தெரிவாகும்.


அடுத்து ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆசியா, கிழக்கு ஆசியா, பசுபிக், ஐரோப்பா என்ற பிராந்திய ரீதியில் WCQS சுற்றுப்போட்டிகள் 2004 இல் இடம்பெறும்.

இந்தச் சுற்றுப்போட்டியில் பிராந்திய ரீதியில் வெற்றிபெறும் ஒவ்வொரு அணியும் நான்காவது குழுவிற்குத் தகுதிபெறும்.

இறுதியாக 2005 இல் WCQS இல் தகுதிபெறும் 12 அணிகள் மற்றும் குழுவொன்றிலிருந்து ஆறு அணிகள், குழு ஐந்திலிருந்து முதல் ஐந்து அணிகள், குழு மூன்றிலிருந்து ஒரு அணி என்று கலந்து கொள்வார்கள்.

முன்னதாக 2003 இன் பிற்பகுதியில் கென்யா, ஐக்கிய அமெரிக்கா, மலேசியா மற்றும் இத்தாலி நாடுகளில் பிராந்திய ரீதியிலான கிரிக்கெட் ஆட்டங்கள் நடைபெறும்.

எனவே - 2005 ஆம் ஆண்டளவில் டெஸ்ட் அந்தஸ்த்து பெறாத நாடுகளிலிருந்து, புதிய புதிய நாடுகள் வீச்சாக முன்னிலைக்கு வரப்போகின்றன. டெஸ்ட் அந்தஸ்த்து பெற்ற 10 நாடுகளைவிட ICC இல் இணைக்கப்பட்ட 27 கிரிக்கெட் விளையாடும் நாடுகள் (AFFILIATE MEMBERS) மற்றும் 47 நாடுகள் ASSOCIATE MEMBERS.



**- ஜோசப் கிருஷ்ணா -**

# இலாபத்தில் இயங்கிய காலத்துக்கான இடைக்காலப்படியை உடன் வழங்குக!

## பருத்தித்துறை கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் கோரிக்கை

சங்கம் இலாபத்தில் இயங்கிய மாதங்களில், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்க மைவாகப் பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய இடைக்காலப் படியான தலா 1,200 ரூபாவை உடன் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பருத்தித்துறை தென்னை, பனைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க, கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் - பருத்தித்துறை தென்னை, பனைவள அபிவிருத்தி சங்கத் தலைவரை கேட்டுள்ளது.

ஆளணி நிர்ணயம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு, அவர்கள் தற்காலிகமாக நியமனம் பெற்றபோது வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தின் அடிப்படையில், அத்தினத்திலிருந்து முதலாவது வருடமுடிவில் சம்பள வுயர்வையும், சம்பளவுயர்வு நிலுவைகளையும் - சக பணியாளர்களுக்கு வழங்கியது போன்று வழங்கப்படவேண்டும்.

கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் 1.12.99 ஆம் திகதி 31/99 இலக்கச் சுற்றறிக்கையின்படி ஊழியர் சம்பளவுயர்வை உரியமுறையில் சுற்றறிக்கைக்கு அமைவாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இக்கோரிக்கைகளின் பிரதி - கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க யாழ். தலைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (17)



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது - பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் றெஜீனா இருதயநாதன் மங்கள விளக்கேற்றி - விழாவை ஆரம்பித்து வைப்பதையும், அருகில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், பாடசாலை அதிபர் சூ.ஜெயவீரசிங்கம் ஆகியோரையும் படத்தில் காணலாம். (46)

# காக்கைதீவு குடியேற்றத்தில் கழிவுகள் கொட்டத் தடை!

மக்கள் செறிந்து வாழும் காக்கைதீவு மாதிரிக்குடியேற்றத்திற்கு அருகாமையிலுள்ள வீதிகளில் - குப்பை, கூழங்கள் மற்றும் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எல்லைக்குட்பட்ட மேற்படி பகுதியில், இனிவரும் காலங்களில் கழிவுகள் மற்றும் கூழங்களை - மாதிரிக் குடியேற்றத்திற்கு அண்மையில் கொட்டுவது கண்டுபிடிக்கப்பட்டால் பிரதேசசபையால் தண்டப்பணம் அறவிடப்படுவதுடன், சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கையும் எடுக்கப்படுமெனப் பிரதேசசபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இக்கிராமத்தில் 40 குடும்பங்களைச் சேர்ந்த 260 இறகும் மேற்பட்ட மீனவர்கள் வாழ்ந்து வருவதால், அங்குள்ள மக்கள் டெங்கு மற்றும் ஏனைய தொற்று நோய்களுக்கு ஆளாகிவருவதாக ஆனைக்கோட்டை சுகாதாரப்பரிசோதகர் - பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி பகுதியில் மக்கள் குடியேறுவதற்கு வசதியாக, பொது நலனில் அக்கறைகொண்டவர்கள் விழிப்பாக இருந்து, சூழல் பாதிப்புக்குக் குந்தகம் விளைவிப்பவர்களைக் கட்டுப்படுத்தவேண்டுமென மானிப்பாய் பிரதேசசபை கேட்டுள்ளது.

இதேவேளை, கடந்தவாரம் காக் கைதீவு மாதிரிக் குடியேற்றப்பகுதியில் சூழல் மாசடையச்செய்த நபர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்குப் பிரதேசசபை நிர்வாகம் தீர்மானித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (100)



புலோலி, புற்றளை மகாவித்தியாலயத்தில் 12 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இரண்டு மாடிக்கட்டடத் திறப்புவிழாவின்போது, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் உரையாற்றுவதையும், அருகில் பருத்தித்துறைப் பிரதேசசெயலர் ஆ.சிவசுவாமி, பழைய மாணவர் சங்கத் தலைவர் ரி.கதிர்காமநாதன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.விநாயமூர்த்தி ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# வட-கிழக்கு மாகாண நிர்வாகத்தில் முஸ்லிம்களுக்கு உயர் பதவிகள்!

## வழங்குவதற்கு ஆளுநர் அசோக ஜெயவர்த்தனா இணக்கம்

(கொழும்பு)

வட - கிழக்கு மாகாணசபை நிர்வாகத்தில் முஸ்லிம்களுக்கு உரிய இடத்தை வழங்க மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன உறுதியளித்துள்ளார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவொன்று கடந்த வியாழக்கிழமை அலரிமாளிகையில் வட - கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தன மற்றும் பிரதமரின் செயலாளர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

இக்குழுவில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், பஷீர் சேகு தாவூத், அன்வர் இஸ்மாயில், ஹரீஸ், தௌபிக் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இச்சந்திப்பின்போது வட - கிழக்கு மாகாணசபையிலுள்ள ஐந்து அமைச்சுக்களில் - பிரதிச் செயலாளர், மாகாணப் பணிப்பாளர், அமைச்சின் ஆலோசகர் ஆகிய பதவிகளில் ஒவ்வொன்றை முஸ்லிம்களுக்கு வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தப் பதவிகளில் முஸ்லிம்கள் எவருமில்லை என்று தெரிவிக்கப்பட்டதையடுத்து, இருவாரங்களுக்குள் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் அசோக ஜெயவர்த்தன உறுதியளித்தார்.

இந்த நியமனங்களுக்கு வசதியாக, பொருத்தமான நபர்களின் பெயர்ப்பட்டியலைத் தமக்கு வழங்குமாறும், முஸ்லிம் எம்.பிக்களை ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

### மட்டக்களப்பு அரச அதிபராக புண்ணியமூர்த்தி

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராகப் புண்ணியமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். இவரது நியமனத்தை பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

### நூல் வெளியீட்டு விழா

ஆசிரியர் தி.மதிவதன் எழுதிய ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு நூல் வெளியீட்டு விழா - இன்று காலை 9.30 மணிக்குச் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காரைநகர், யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பாட நூல் வெளியீட்டுத் திணைக்களப் பிரதி ஆணையாளர் கலாநிதி ச.நா. தணிகாசலம்பிள்ளை நூலை வெளியிட்டுவைப்பார்.

# விமானப்படையின் பிரதம தலைமை அதிகாரியாக லக்ஷ்மன் சல்காடோ நியமனம்!

இலங்கை விமானப்படையின் பிரதம தலைமை அதிகாரியாக (Chief of staff) எயர் வைஸ் மார்ஷல் லக்ஷ்மன் சல்காடோ நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் விமானப்படையின் நடவடிக்கை இயக்குநராக முன்னர் பணியாற்றியிருந்தார்.

முன்னாள் விமானப்படைத் தளபதியான எயர் மார்ஷல் ஜெயலத் வீரக்கொடி பதவி விலகியதையடுத்து, பிரதம தலைமை அதிகாரியாக இருந்த எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா விமானப்படைத் தளபதியாகப் பொறுப்பேற்றிருந்தார்.

இதன் பின்னர் விமானப்படையின் பிரதம தலைமை அதிகாரிப் பதவிக்குப் பலமாதங்களாக எவரும் நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### வருடாந்த உற்சவம்

பருத்தித்துறை, வியாபாரி மூலை, பழவத்தை காளிகாதேவி ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று வேட்டைத் திருவிழாவும், நாளை தேர்த்திருவிழாவும், நாளை மறுதினம் சமுத்திர தீர்த்த உற்சவமும் நடைபெறும். (17)

# மூன்று நாட்கள் நடைபெற்ற விளையாட்டு பயிற்சிப்பட்டறை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டக் கல்விசார், கல்விசாரா விளையாட்டுத்துறையினருக்கான பயிற்சிப்பட்டறை நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அலுவலர் ஏ.எவ.ஜே.ரூபசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மேலதிக அரச அதிபர் பத்தினியம்மா திலகநாயகம் போல் சான்றிதழை வழங்கிக் கௌரவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் தேசிய விளையாட்டு, விஞ்ஞானத்துறை நிறுவனத்தின் பயிற்சியாளர்கள் குழுவினால் இந்தப் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.

இந்தப் பயிற்சிநெறியில் குடாநாட்டிலுள்ள பிரதேச செயலகங்கள், பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த அலுவலர்கள், வீரர்கள் சுமார் 160 பேர் கலந்துகொண்டனர்.

கூடைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கபடி, ஹொக்கி, வலைப்பந்தாட்டம் போன்ற துறைசார்ந்த பயிற்சியாளர்களால் இந்தப்பயிற்சிநெறி மூன்று தினங்களாக வழங்கப்பட்டது. (ச)



பயிற்சிகளை வழங்கிய அதிகாரிகள் குழு

# ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்க மனித உரிமைகள் உபகுழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவோடு இணைந்து செயற்படுவதற்கென 5 பேர் கொண்ட உப குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் பேராசிரியர்களான தயா சோமசுந்தரம், ஏ.ஆறுமுகம், சி.க.சிற்றம்பலம் மற்றும் சுபியான், சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இக்குழுவினர் யாழ். மனித உரிமைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதுடன், இக்குழுவினருடன் மனிதவுரிமை ஆணைக்குழுவில் இணைந்து பல முக்கிய தீர்மானங்களைச் செயற்படுத்துவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்புக்கு அமையவே இந்த உபகுழு அமைக்கப்பட்டுள்ளது.

# லயன்ஸ் வலய கழகத்தலைவர் வடமராட்சி கழகத்திற்கு விஜயம்!

(வடமராட்சி கிழக்கு)

லயன்ஸ் வலயக் கழகத் தலைவர் வைத்திய கலாநிதி எஸ். யோகேஸ்வரன், உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு, நெல்லியடியிலுள்ள லயன்ஸ் கழகக் காரியாலயத்திற்கு நாளை மறுநாள் வருகை தரவுள்ளார்.

அன்று 3 மணிக்கு லயன்ஸ் கழகத்தின் கூட்டமும் நடைபெறும், லயன் கழகத்தினால் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.
- திருக்குறள்.

## நமது நோக்கு

# இறுதி வாய்ப்பு!

சமாதான முயற்சிகளின் மீதுள்ள நம்பிக்கையையும், சர்வதேசத்தின் மீதுள்ள மதிப்பையும் - ஜப்பான் பேச்சுக்களில் கலந்துகொள்வதான தமது முடிவின் மூலம் விடுதலைப் புலிகளின் தலைமை மீண்டும் வெளிக்காட்டியிருக்கிறது, வலியுறுத்தியிருக்கிறது.

சர்வதேசக் கடற்பரப்பில், விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல் அழிக்கப்பட்டதும், அதிலிருந்த பதினொரு போராளிகள் கொல்லப்பட்டதுமான சம்பவம் - பாரியதொரு யுத்தநிறுத்த மீறலாக, ஆத்திரமூட்டும் செயலாக அமைந்துவிட்ட நிலையில்,

பேச்சுக்களில் தற்காலிகமாக ஒதுங்கியிருப்பதாக யோசித்து வருவதாகவும், தமது எதிர்ப்பைப் பதிவு செய்ய இது ஒரு வழியெனவும் விடுதலைப் புலிகள் முதலில் அறிவித்திருந்தனர்.

ஆனால் - பேச்சுவார்த்தையைப் பகிஷ்கரித்து ஆட்சேபனையைத் தெரிவிப்பதிலும் பார்க்க, பேச்சுவார்த்தையில் பங்குபற்றி நேரடியாகவே ஆட்சேபனையைத் தெரிவிப்பதுதான் புத்திசாலித்தனமான முடிவு என விடுதலைப் புலிகளின் தலைவர் முடிவு செய்திருப்பதைத் தொடர்ந்து -

விட்டுக்கொடுப்புடனும், அமைதிக்கான சந்தர்ப்பத்தை உறுதிப்படுத்தும் நோக்குடனும் - விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவினர் இன்று - ஜப்பானுக்கான தமது பயணத்தை ஆரம்பிக்கின்றனர்.

புலிகளின் இந்த முக்கிய முடிவு பற்றி அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவிக்கும்போது -

கப்பல் அழிப்புச் சம்பவம் குறித்து புலிகள் தரப்பிலுள்ள நியாயத்தைச் சிங்களத் தரப்புக்கு எடுத்து விளக்கி, சிங்களத் தரப்புதான் தவறு செய்தது என்பதை அவர்களுக்கு எடுத்துக்கூறி, இதற்கான கடுமையான ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறு தலைவர் தன்னைப் பணித்திருப்பதாகவும்,

ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் நிகழ்ந்தபோதும் போர்நிறுத்தத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்து அமைதியைப் பேணி, பேச்சுக்களைத் தொடர்வதுதான் எமது உறுதியான தீர்மானம். மக்களும் இதையே விரும்புகின்றார்கள் எனவும் குறிப்பிட்டிருப்பதுடன் -

கப்பல் அழிப்புச் சம்பவம் தலைமைப் பீடத்தையும், எமது போராளிகளையும் உலுப்பியபோதும் - நாம் மனந்தளராது, உறுதி தளராது அமைதியைப் பேணிப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடாத்தி, எம்மால் முடிந்தளவுக்கு பேச்சுக்களை, முன்னெடுப்பதுதான் நல்ல செயற்பாடு என தலைவர் முடிவெடுத்துள்ளார் என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் இந்த அறிவிப்பானது, அவர்களது உறுதியையும், விசுவாசத்தையும் சர்வதேசத்திற்கும் அரசாங்கத்திற்கும் எடுத்துக்காட்டுகின்ற அதே வேளை -

அமைதியைச் சீர்குலைக்கவும், விடுதலைப் புலிகளை ஆத்திரமூட்டவும் கணக்கு வழக்கற்ற அழிவு வேலைகளைச் செய்துவரும் படையினருக்கும், அரசியல் தலைமைகளுக்கும் முகத்திலறைந்த நடவடிக்கையாக அமைந்திருக்கின்றது.

ஆயுதப் போராட்டத்தில் - வீரத்தோடும், துணிச்சலோடும் போராடி, போர்க்களத்தில் ஏராளம் வெற்றிகளைச் சுமந்துநிற்கும் ஒரு தேசிய விடுதலை இயக்கம்,

திறன்மிகுந்த, கடற்பயணத்தில் அனுபவம் வாய்ந்த தனது போராளிகளை இழந்தபோதும் பொறுமை காட்டுவதும் -

அமைதி முயற்சிகளிலும், சமாதானத்தின் மீதான உறுதிப்பாட்டிலும் காட்டும் அர்ப்பணிப்பும் வியக்கவைக்கும் செயல்களென்பதை சர்வதேசம் குறித்துக்கொள்ள வேண்டும்.

அதேவேளை - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் சுட்டிக்காட்டியிருப்பது போல -

தற்போது நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்கள், சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்ட இறுதிச் சந்தர்ப்பம் என்பதையும் -

இப்பேச்சுக்கள் மூலம் தமிழ் மக்களுக்கு நீதியான, கௌரவமான சுயாட்சி அதிகாரம் ஒன்று கிடைக்க வேண்டும். அல்லாது போனால் , தமிழர் பகுதியில் தனியரசு அமைவதை எவராலும் தடுக்கமுடியாது என உறுதிபடக்கூறியிருப்பதையும் - அரசாங்கத் தரப்பு ஜப்பானுக்குப் புறப்படுவதற்கு முன்பே மனதிற்கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகள் ஜப்பான் பேச்சுக்களுக்கு வருவதாக இணங்கியிருப்பதன் முக்கியத்துவமும், அவர்களது தீர்மானத்தின் பெறுமதியும் - அரசாங்கத் தரப்பில் உணரப்பட்டாகவே வேண்டும்.

இவற்றினைக் கருத்திற்கொண்டு - இனியும் யுத்த நிறுத்த மீறல்களுக்கும், போராளிகளைத் தாக்குவதற்கும், அழுத்தத்திற்குள்ளாக்குவதற்கும் இடந்தராத வகையில் - உறுதியான, தெளிவான நிலைப்பாடுகளுக்கு அரசாங்கம் சம்மதிக்கத் தவறும் பட்சத்தில்,

தமிழ் மக்களுக்கான நீதியான, கௌரவமான சுயாட்சி அதிகாரத்தை வழங்குவதற்கான முயற்சிகளில் விசுவாசமின்றி நடக்கும் நிலையில்,

விடுதலைப் புலிகள் உறுதிபட அறிவித்திருப்பதன்படி- சிங்கள தேசத்திற்கும், மக்களுக்கும் வழங்கப்பட்ட இறுதியான சந்தர்ப்பத்தை - அவர்களே இயலுமான விரைவில் இழந்ததாகிவிடும்.

# போகிற போக்கில்......

உலகக் கிண்ணப் போட்டிகள் தென்னாபிரிக்காவில் நடந்து கொண்டிருக்கின்றன. உலகமக்களின் கவனமே தென்னாபிரிக்காவின் பக்கம் திரும்பியுள்ளது. இதற்கு இலங்கை மக்களும் விதிவிலக்கல்ல. உலகின் முன்னணி கிரிக்கெட் அணிகள் மோதும் நாட்களில், கொழும்பிலுள்ள அலுவலகங்களுக்கு ஊழியர்கள் கிரமமாக வருவதில்லையாம். பெரும்பாலான இடங்களில் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களின் வரவும் குறைந்துள்ளதாம். மாணவர்களின் வரவு மட்டுமா, ஆசிரியர்களின் வரவும்தான்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் நாட்களில், கொழும்பிலுள்ள தொலைக்காட்சி விற்பனை நிலையங்களுக்கு முன்னால் பெருமளவு பொதுமக்கள் கூடிவிடுகின்றனர். காட்சியறைகளின் முன்னால் வைக்கப்பட்டிருக்கும் தொலைக்காட்சிகளில் கிரிக்கெட் நிகழ்வுகள் ஒளிபரப்பாகின்றன. இதனால், தொலைக்காட்சி விற்பனை நிலையங்களுக்கு முன்னால் வயது வேறுபாடின்றி பலரும் கூடிநின்று கிரிக்கெட் போட்டிகளை ரசிக்கின்றனர். இப்படித் தம்மை மறந்து கிரிக்கெட்டில் மூழ்கியிருப்பவர்கள், தங்களது மணிப்பேசையும் இழந்து வருகின்றநிலையையும் கொழும்பில் காணமுடியும்.

இது இவ்வாறிருக்க, உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றும் நாடுகளின் ஆதரவாளர்கள்- தங்கள் நாடு வெல்லவேண்டும் என்று விரும்புவதில் வியப்பில்லை அல்லவா! அதில் என்ன சந்தேகம் என்று நீங்கள் கேட்கலாம். நீங்கள் கேட்பதிலும் நியாயம் இல்லாமலில்லை.

உங்களுடைய கேள்வி நாட்டுப்பற்றுள்ள மக்கள் வாழும்

## கொழும்பிலிருந்து உதரன்

நாடுகளுக்குப் பொருத்தமானது. ஆனால், சொந்த நாட்டிலேயே இரண்டாம் பட்சப் பிரஜையாகப் பலவருடங்களாக வாழும் மக்களுக்குப் பொருந்துமா? அந்த மக்களிடம் தேசப்பற்றை எதிர்பார்க்க முடியுமா?

தேசப்பற்று இல்லாத மக்கள் வாழும் நாடுகளும் இருக்கிறதா என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். யுத்தநிறுத்தம், அமைதிப்பேச்சுவாத்தை என்ற சொற்பிரயோகங்கள் பரவலாகப் பிரயோகிக்கப்படுவதால், நீங்கள் “இலங்கை'' என்ற சிறிய நாட்டை மறந்திருக்கலாம். ஏனென்றால் - யுத்தநிறுத்த ஒப்பந்தத்தையே தமிழர்களுக்குரிய உரிமை கிடைத்துவிட்ட ஒப்பந்தம் என நம்பும் அப்பாவி மக்களும், போலி அரசியல்வாதிகளும் நம்மிடையேதான் இருக்கிறார்கள். அதனால், இலங்கையை நீங்கள் மறந்ததில் வியப்பெதுவுமில்லை.

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டித்தொடரில் இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகள் மோதியதை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். இந்திய கிரிக்கெட் அணியும், பாகிஸ்தான் கிரிக்கெட் அணியும் மோதுவதை இருநாட்டு யுத்தமாகவே இந்திய கிரிக்கெட் ரசிகர்களும்- பாகிஸ்தான் கிரிக்கெட் ரசிகர்களும் கருதுகின்றார்கள். விளையாட்டை விளையாட்டாகக் கருதி - கற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் இல்லாத நாடுகளில் முதலிடத்தில் இருப்பவை இந்த இருநாடுகளுமேயாகும்.

இந்தியாவுக்கும் - அவுஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெற்ற உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில், அவுஸ்திரேலிய அணியிடம் இந்திய அணி படுதோல்வியைத் தழுவியது. அதனைத் தொடர்ந்து இந்தியாவிலுள்ள கிரிக்கெட் ரசிகர்களால் - இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு இறுதிக் கிரியைகள் நடத்தப்பட்டன. இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் சௌரவ் கங்குலி, சச்சின் டெண்டுல்கர் உட்பட இந்திய அணியில் இடம்பெற்ற அனைத்து வீரர்களின் உருவப்படங்களைப் பாடையில் வைதது ஊர்வலமாகக் கொண்டுசென்ற இந்தியக் கிரிக்கெட் ரசிகர்கள், தீயிட்டுக் கொழுத்தினர். இதிலிருந்து என்ன தெரிகிறது - விளையாட்டை விளையாட்டாகக் கருதாத ரசிகர்கள் உள்ள நாடு இந்தியா என்று புரிகிறதல்லவா.

இந்திய -அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான உலகக்கிண்ணப் போட்டியைத் தொடர்ந்து இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடந்தது. இவ்விரு நாட்டுக் கிரிக்கெட் ரசிகர்கள் - இப்போட்டியை இருநாட்டு யுத்தமாகவே கருதினர்.

ஆனால், இந்தியக் கிரிக்கெட் வீரர்களும், பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களும் எந்தவிதமான இறுமாப்புமின்றி நாகரிகமானமுறையில் விளையாடினர். இம்முறை எந்த அணியுமே யுத்தகளததில் நிற்பதுபோன்ற நிலையை எடுக்கவில்லை. இப்போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது.

அப்போதும்கூட பாகிஸ்தான் வீரர்களோ, இந்திய வீரர்களோ தங்களது நிலையினின்று தளம்பவில்லை. சர்வசாதாரணமாகவே கைகுலுக்கிக்கொண்டனர். இருநாட்டு ரசிகர்களும் யுத்தமாகக் கருத, இரு அணியினரும் விளையாட்டை விளையாட்டாகவே கருதினர்.

இப்போட்டியைத் தொலைக்காட்சியில் இலங்கை ரசிகர்களும் பார்க்கத்தவறவில்லை. சயிட் அன்வர் 101 ஓட்டங்களைப் பெற்றபோது, கொழும்பிலுள்ள இலங்கை வாழ் முஸ்லிம் ரசிகர்கள் - பாகிஸ்தானுக்கு ஆதரவாக வெடிகொழுத்தி மகிழ்ந்தனர். அதேநேரம், இந்திய அணி சிறப்பாக விளையாடும்போதெல்லாம் கொழும்புவாழ் தமிழர்கள் வெடிகொளுத்தி மகிழ்ந்தனர். இந்தியஅணி வெற்றி பெற்றபோது- தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் வெடிச்சத்தம் ஓய நீண்டநேரம் செனறது. அவர்கள் வெற்றிக்களிப்பில் மிதந்தனர்.

கொழும்புவாழ் சிங்கள மக்கள் - இலங்கையில் வாழும் முஸ்லிம்களினதும், தமிழர்களினதும் செய்கைகளை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். இலங்கையில் வாழும் இவர்கள் இந்தியாவுக்காகவும், பாகிஸ்தானுக்காகவும் வெடிகொளுத்துகின்றார்கள் என்று சிந்திக்கவேயில்லை. அவர்களுக்குத் தெளிவான சிந்தனை இருந்திருந்தால் இனப்பிரச்சினைக்கு எப்பவோ தீர்வு கண்டிருப்பார்கள் என்று எண்ணத் தோன்றுகின்றதல்லவா?

இப்போட்டி நடைபெற்ற சில நாட்களின் பின்னர் இலங்கை- இந்திய அணிகள் மோதும் உலகக்கிண்ண சுப்பர் சிக்ஸ் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. அப்போட்டியில் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இந்திய அணி சிறப்பாக விளையாடும்போதெல்லாம் கொழும்பு வாழ் தமிழர்கள் வெடிகொளுத்தி மகிழ்ந்தனர். இந்திய அணியின் துடுப்பாட்டம் முடியும்வரை வெடிச்சத்தமும் ஓயவில்லை.

இலங்கை அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியதும்- இலங்கைவாழ் தமிழர்களின் வெடிகொளுத்தும் ஆர்வம் குறைந்தது ஏன்? என்று நீங்கள் கேட்கலாம். இன்னும் புரியாவிட்டால் என்னால் ஒன்றும் செய்யமுடியாது. இலங்கை அணி ஆடத் தொடங்க, சிங்கள ரசிகர்கள் வெடிகொளுத்த ஆரம்பித்தார்கள். விரைவாக இலங்கை அணியின் விக்கட்டுகள் வீழ்வதைக் கண்டதும் அவர்கள் வெடிகொளுத்துவதை நிறுத்தினார்கள். அதன்பின் சிங்கள ரசிகர்கள் வெடிகொளுத்தவேயில்லை. இலங்கை அணி வெல்லும் என்ற கணிப்பில்- வாங்கி, வீதிகளில் வெடிக்கத் தயாராக வைத்திருந்த வெடிகளை- அதாவது, தொடர்வெடிகளை வீடுகளுக்கு எடுத்துச்செல்ல ஆரம்பித்தார்கள்.

கொழும்புவாழ் தமிழர்களால் இந்திய அணியின் வெற்றியைக் கொண்டாட முடியவில்லை. வெடிகொளுத்தியிருந்தால், என்ன விபரீதம் ஏற்படும் என்பதை நன்கு அறிந்திருந்தவர்கள் தமிழர்களல்லவா!

இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்தது. இப்போது சுதந்திரமடைந்து 55 ஆண்டுகளாகிவிட்டது. இம்முறைதான் இலங்கையில் சுதந்திரதினவிழா சுதந்திர சதுக்கத்தில் - சுதந்திரமாகக் கொண்டாடப்பட்டது. எவ்வித அச்சமுமின்றி மக்கள் சுதந்திரமாகச் சுதந்திரதினவிழாவில் பங்குபற்றினர். மக்கள் மட்டுமா? அரசியற்தலைவர்களும்தான்.

எது எப்படி நடந்தாலும்- 55 ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னும், எந்தவொரு அரசாலும் சிறுபான்மையினத்தவரிடத்தே நாட்டுப்பற்றை ஏற்படுத்தமுடியவில்லை. அதற்குப் பதிலாக இனமோதலையே ஏற்படுத்தமுடிந்தது. அதன் வெளிப்பாடுதான் இந்தக் கிரிக்கெட் வெடிச்சத்தங்கள் என்று சொல்லலாமா?.

எந்தவொரு சிங்கள அரசியற்தலைவராலும்- தேசப்பற்றைச் சிறுபான்மையினத்தவரிடம் வலியுறுத்த முடிந்ததா என்றால், இல்லை என்பதுதான் பதிலாகக் கிடைக்கும்.

எதிர்காலத்தில் சிறுபான்மை மக்களிடையே தேசப்பற்றை வளர்ப்பதில் ஆட்சியாளர்கள் வெற்றி காண்பார்களா? என்று சாதாரண பொதுமகன் ஒருவரிடம் கேட்டேன். அதற்கு அவர், “ஜே.வி.பி. கட்சி இருக்கும்வரை அது நடக்காது. ஆனால்; அதற்கு எதிர்மாறாக ஏதாவது நடக்கும். அவர்களே நாடு பிரிந்து விட்டது என்று கூறி விட்டார்களே'' என்று சொல்லிச் சென்றுவிட்டார்.

# புலிகளின் கப்பல் மூழ்கடிப்பு விவகாரம் ஜப்பானியப் பேச்சுக்களில் ஆராயப்படும்

கிழக்குக் கடற்பரப்பில் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது தொடர்பாக, ஜப்பானின் ஹெக்கோன் நகரில் நடைபெறவுள்ள பேச்சுக்களில் ஆழமாக ஆராயப்படும் என்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் -

இனிவரும் காலத்தில் புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் என்ன செய்வது என்பது குறித்தும் ஹெக்கோனில் ஆராயப்படும். அத்துடன், கடலில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்த பொறிமுறையொன்று உருவாக்கப்படவேண்டும்.

இருதரப்புமே புரிந்துணர்வு உடன்பாட்டில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என வலியுறுத்திவருகின்றன. இது தொடர்பாகவும் பேச்சுக்களின்போது ஆராயப்படும்.

மேலும் கண்காணிப்புக்குழுவினரின் பாதுகாப்புப் பற்றியும் பேசப்படும் எனவும் ஹெல்கிசன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ரெய்ரூர் ரொல்கில்சன் தகவல் வெளியிட்டபோது -

கிழக்குக் கடற்பரப்பில் புலிகளின் கப்பல் தாக்கப்பட்டது தொடர்பாகக் கடற்படை தந்த விடியோ பிரதிகள் துண்டு துண்டாகவே உள்ளன. இதனால், முழு விடியோ பிரதியைத் தருமாறு கேட்டுள்ளோம்.

ஜப்பானில் நடைபெறவுள்ள பேச்சுக்கு முன்னர்- கப்பல் தாக்கப்பட்டது தொடர்பான கண்காணிப்புக்குழுவின் அறிக்கை வெளியிடப்படும். சம்பவம் நடந்த இடத்தில் கண்காணிப்புக் குழுவினர் இல்லாது போனதால், இந்த அறிக்கையைத் தயாரிப்பது சிரமமானதே என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வட- கிழக்கு வைத்தியசாலைகளுக்கு 140 வைத்தியர்கள் நியமிக்கப்படுவர்

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளுக்கு 140 வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் குமரவேற்பிள்ளை தெரிவித்தார்.

அத்துடன், வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு 25 அம்புலன்ஸ் வண்டிகளும் புதிதாக வழங்கப்படவுள்ளன. இதில் 16 அன்புலன்ஸ் வண்டிகளை நிகொட் திட்டமும், 9 அன்புலன்ஸ் வண்டிகளை வட - கிழக்கு மாகாணசபையும் வழங்கவுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

(க)

# ஜூன் மாதத்துக்கு முன்னர் ஆட்சியமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ள ஜனாதிபதி சந்திரிகா

## தெற்குத் திசையினிலே

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம்- ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் நிறைவேற்று அதிகாரம் என்ற பிடிக்குள் சுழல வேண்டியநிலை தீவிரமடைந்துள்ளது. 2002 ஆம் ஆண்டில் பதவியேற்றது முதல் ரணிலின் அரசாங்கம், சந்திரிகாவின் கூர்மையான பார்வையில் இருந்துவருகிறது. இதன் காரணமாக ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பிரதமர் வழங்கிய வாக்குறுதிகள், பொருளாதாரத் திட்டங்கள், இனப்பிரச்சினைத் தீர்வின் தீவிர முன்னெடுப்புக்கள் என்பன தாமதமடைந்தன. எனினும், இவ்வாறான சில விடயங்களில் ஜனாதிபதியுடன்- பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தை நடத்தி நிலைமைகளை விளக்கிய பின்னர், அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு அனுமதி கிடைத்தது.

அந்த அனுமதிக்குப் பக்கபலமாக சிலவேளைகளில் அரசாங்க அமைச்சர்களின்- ஜனாதிபதிக்கு எதிரான அச்சுறுத்தல்களும் உதவின. கடந்த ஒருவருட காலமாக நிலவிவந்த இந்த நிலைமை தற்சமயம் தீவிரமடைந்துள்ளது. ஜனாதிபதி - முன்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற கட்சியை மாத்திரம் வைத்துக் கொண்டு, அரசாங்கத்துக்கு எதிரான முன்னெடுப்பை மேற்கொண்டுவந்தார். அந்த நேரத்தில் அவர் அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள், பெரிதாக எடுபடவில்லை. விலையுயர்வுகள், சமாதான முன்னெடுப்பின் பாதக விளைவுகள் என அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டிப் பொதுஜன ஐக்கிய முன்னணி எடுத்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குக் குறைந்தளவு ஆதரவே கிடைத்துவந்தது. தமது ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதி சிறந்த ஆட்சிமுறையை மக்களுக்கு வழங்கவில்லை என்ற எண்ணம் மக்கள் மத்தியில் இருந்து அகலாமையே அதற்கான காரணமாகும். பொதுஜன ஐக்கிய முன்னணி ஏற்பாடு செய்திருந்த பேரணிகள் குறைந்த ஆட்பலத்துடன் முடிவடைந்திருந்தன. இதற்குள் ஜனாதிபதிக்கும், அவரின் கட்சிக்குள் இருப்பவர்களுக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டுவந்தது. ரிச்சர்ட் பத்திரன, ஏ.எச்.எம்.பௌசி உட்பட்டவர்கள் ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்குப் பாரிய எதிர்ப்புகளைக் காட்டிவந்தனர்.

உயர்மட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கூட- ஜனாதிபதிக்கு எதிராகச் செயற்படுகிறார் எனக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுவந்தன.

இவ்வாறான சூழ்நிலையிலே ஜனாதிபதியின் முன்வைப்புகள் வெற்றியைத் தருவதற்குப் பதிலாக, தோல்விகளையே சந்தித்துவந்தன. ஆனால், நாட்கள் நகர நகர பொதுஜன ஐக்கிய முன்னணியும் தமது பலத்தை உயர்த்திக்கொள்ள முயற்சித்தது. அதற்காக, ஐக்கிய தேசிய முன்னணிக்குள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு- எதிரான நிலைப்பாடுகளைக் கொண்டிருப்பவர்களை- பொதுஜன ஐக்கிய முன்னணி தம்வசம் இழுத்துக் கொள்ள முயற்சித்தது. ரணில் விக்கிரமசிங்க, தமிழீழ விடுதலைப்புலிகளுக்குச் சார்பாக நடந்துகொள்கிறார் என்ற மாயையை இதற்காக ஜனாதிபதியும், அவரின் கட்சியும் முன்னிலைப்படுத்திவந்தன.

மறுபுறத்தில் ஐக்கிய தேசிய முனனணி அரசாங்கத்தில், உரிய வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்ன அதிருப்தி கொண்டிருந்தவர்களையும்- ஜனாதிபதியின் கட்சி குறிவைத்து, தம்பக்கம் திசை திருப்ப முயற்சித்தது.

எனினும் - அதனை முறியடிக்கப் பிரதம மந்திரி தலைமையிலான அரசாங்கம் எடுத்துக்கொண்ட முனைப்புக்கள் வெற்றிபெற்றன. குறிப்பாக, இரண்டு மாதங்களுக்கு முன்னர் 7 அமைச்சர்கள் நியமனம் பெற்றமை இதற்கு உதாரணமாகும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளவுபடுத்தி, தமது ஆட்சியை மீண்டும் கைப்பற்ற ஜனாதிபதி எடுத்துக்கொண்ட முயற்சி தோல்வியடைந்த நிலையில்,

மக்கள் விடுதலை முன்னணியுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டை வைத்துக்கொள்ள இணங்கியது. நாட்டைக் காக்கப்போகிறோம் என்ற தொனியில் ஏற்படுத்தப்படுகின்ற இந்தக்கூட்டு, நாட்டின் நிர்வாகம் குறித்து இதுவரை சுமார் 25 விடயங்களில் இணக்கங்களை எட்டியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும், பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அந்தக் கூட்டின் இணக்க முனைப்பு இன்றுவரை பலிக்கவில்லை. என்றாலும், கூட்டுநிலைப்பாட்டை முன்கொண்டு செல்லவேண்டும் என்பதற்காக, மக்கள் விடுதலை முன்னணி "சமஷ்டி" மூலம் பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம் என்பதில் நடைமுறைக்குச் சாத்தியமில்லாத நிபந்தனைகளை விதித்துள்ளது.

இதனையும் ஜனாதிபதியின் கட்சி, முழுமையாக ஏற்றுக்கொண்டதைப் போன்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வு என்பதைக் காட்டிலும், அரசாங்க நிர்வாகம் மீண்டும் தமது கைக்கு வரவேண்டும் என்பதில் பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் தீவிர முனைப்பைக் காட்டிவருகின்றன. மக்கள் விடுதலை முன்னணியைப் பொறுத்தவரை- இது ஒரு அதிஷ்டலாபச் சீட்டுக்கான வாய்ப்பாகும். தொடர்ந்தும் எதிர்க்கட்சியாகவே இருந்து நாட்டின் நிர்வாகத்தை விமர்சித்துக் கொண்டிருப்பதைவிட, அரசாங்கம் ஒன்றில் அங்கம் பெறப் போவது அதனைப் பொறுத்தவரையில், உயர்ந்த இடம் கிடைத்தமைக்குச் சமனாகும்.

போராளி இயக்கமாக இருந்த மக்கள் விடுதலை முன்னணி, தமது போராட்டம் வலுவிழந்த அல்லது வலுவிழக்கச் செய்யப்பட்ட நிலையில் ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டது. அந்த ஜனநாயகத்தின் கீழ் இன்று பாரிய வளர்ச்சியை அது கண்டிருக்கிறது. 1994 ஆம் ஆண்டு இடதுசாரிக்கூட்டின் மூலம், நாடாளுமன்றத்தில் ஒரு ஆசனத்தை மாத்திரம் கொண்டிருந்த மக்கள் விடுதலை முன்னணி, இன்று 10 இற்கும் மேற்பட்ட ஆசனங்களைக் கொண்டிருக்கிறது. இதன்மூலம் பேரம் பேசும் ஆற்றலை அந்தக் கட்சி பெற்றுள்ளது. பரம்பரையான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பவற்றின் ஆதரவாளர்கள்- பாரியளவில் மக்கள் விடுதலை முன்னணியின் பக்கம் தமது கவனத்தைத் திருப்பியிருக்கவில்லை.

எனினும், அந்த ஆட்சியாளர்களினால் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள், மக்கள் விடுதலை முன்னணியில் தீவிர பிடிப்பைக் கொண்டுள்ளனர். இத்தகைய ஒரு நிலைப்பாட்டில் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து செயற்படும் மக்கள் விடுதலை முன்னணி- பொதுஜன முன்னணியை நன்னடத்தைப் பாணியில் அடக்கியாளும் நிர்வாகங்களையும் சில மாகாணசபைகளில் ஏற்படுத்தியுள்ளமை அதன் வளர்ச்சியைக் காட்டுகிறது. குறிப்பாக, தமிழ்பேசும் மக்கள் மத்தியில், வரவேற்பை பெறாத அந்தக் கட்சி "இனவாதம்" என்ற வழியில் பாரிய முன்னேற்றத்தைச் சிங்களவர்களின் மத்தியில் பெற்றுள்ளது.

இனி, இந்தக் கட்சியின் செல்வாக்கைக் கொண்டு, பொதுஜன ஐக்கிய முன்னணி எப்போது ஆட்சியை ஏற்படுத்தப்போகிறது? இரண்டு கட்சிகளும் தமக்குள் இறுக்கமான உறவுகளை ஏற்படுத்திகொள்ளாத போதும், ஐக்கிய தேசியக்கட்சியை வீழ்த்த வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில் 'கூட்டு' நிலைப்பாட்டை வலுப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன.

இவற்றில் ஒன்றுதான் - அண்மையில் அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பேரணியாகும். இந்தப் பேரணியைப் பொதுஜன ஐக்கிய முன்னணி தனியாகவே ஏற்பாடு செய்திருந்தது. எனினும், தாம் ஏற்கனவே கூறிய பேரணியில் கலந்து கொள்வோரின் தொகை குறித்து அந்த முன்னணிக்குச் சந்தேகம் ஏற்பட்டு விட்டது. "10 இலட்சம் பேரைக் கொழும்பில் கூட்டி, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை வீட்டுககு அனுப்புவோம்" என்ற இந்தக் கட்சியின் அறைகூவல் செயலிழந்த நிலையில், மக்கள் விடுதலை முன்னணியையும் அதில் இணைத்துக் கொள்வது என்ற முடிவு எடுக்கப்பட்டது. தமது பலத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்குக் காட்டுவதைக் காட்டிலும், தமது முன்னணியின் புதிய கூட்டாளியான பொதுஜன ஐக்கிய முன்னணிக்குக் காட்டவேண்டியது மக்கள் விடுதலை முன்னணியைப் பொறுத்தவரையில், இங்கு அவசியமாகக் காணப்பட்டது.



பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவர்களை வழி நடத்தும் பொறுப்பு இப்போது விமல் வீரவன்சவுக்கு...!

அதனடிப்படையில் சுமார் 11/2 இலட்சம் பேரையாவது மக்கள் விடுதலை முன்னணி பேரணியில் பங்குகொள்ளச் செய்தது. மாற்றுக் கட்சிப் பேரணியைக் குழப்பி, அதனைச் செயலிழக்கச் செய்ய முன்னர் திட்டங்களை வகுத்திருந்த போதிலும், பின்னர் அந்த நிலைப்பாடு கைவிடப்பட்டது. பேரணியை ஓரளவு திருப்தியாக நடத்திக் கொண்டிருந்த வேளையில், இந்தக் கட்சிகளுக்கு மற்றுமொரு பிரசார விடயம் கிடைத்துவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவமே அதுவாகும். கப்பல் தாக்கப்பட்டமையானது- ஜனாதிபதியின் உத்தரவின் பேரிலேயே இடம்பெற்றதாகப் பேரணியில் வைத்து உரையாற்றிய - நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமவீர உரிமை கோரினார். உண்மையில் அந்தக் கூட்டத்தில் அவரின் உரிமைகோரல் பலத்த வரவேற்பைப் பெற்றது. ஆனால், தமிழமக்கள் மத்தியில் இந்த உரிமைகோரல் பாதகமாக அமைந்துவிடுமோ? என்ற அச்சத்தில், அந்தக் கட்சி ஜனாதிபதிதான் சம்பந்தப்பட்ட கப்பலைத் தாக்கச்சொன்னார் என்ற விடயத்தைத் தொடர்ந்தும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதேநேரம், சர்வதேசக் கடற்பரப்பிலே இந்தக் கப்பல் தாக்கப்பட்டமை தெரியவந்ததும், ஜனாதிபதியின் உத்தரவு அடிப்படையற்றதாக மாறிவிடுமோ? என்ற உணர்வு பொதுஜன ஐக்கிய முன்னணியின் மத்தியில் ஏற்பட்டுவிட்டது. இதன் காரணமாகவே கப்பல் தாக்கி அழிக்கப்பட்டமை, ஜனாதிபதியின் உத்தரவின் அடிப்படையிலேயே நிகழ்ந்தது என்பதை அந்த முன்னணி தொடர்ந்தும் பிரசாரப்படுத்தவில்லை.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற அடுத்தநாள், பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க முன்னறிவித்தலின்றி ஜனாதிபதியைச் சந்திக்கச் சென்றமை சற்று வியப்பை ஏற்படுத்தியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கப்பட்டமை குறித்து அரசாங்கம் எந்தவொரு நிலைப்பாட்டையும் எடுக்காதபோதிலும, அது நடைமுறைப் போர்நிறுத்த உடன்பாட்டுக்குப் பாதகமான விடயமென அஞ்சியது. தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தம் ஒன்றை ஆரம்பித்து விடுவார்களோ என்ற அச்சம் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுவிட்டது. இதன் காரணமாகவே பிரதம மந்திரி ஜனாதிபதியைச் சந்தித்து இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்தார். இதன்போது, கப்பல் தாக்கப்பட்டமை ஜனாதிபதியின் உத்தரவின் பேரில்தான் இடம்பெற்றது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளப் பிரதம மந்திரி முயற்சி மேற்கொண்டார்.

எனினும், ஜனாதிபதியின் உத்தரவு என்ற விடயத்தைப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் மங்கள சமரவீரவைத் தவிர வேறெவரும் கூறாத நிலையில், கடற்படைதரப்பும் அதனை மறுத்திருந்தது. நிலைமைக்கேற்பவே தாம் தாக்கியழிக்கும் முடிவை எடுத்தாக அது அறிவித்தது. இந்தநிலையில் மங்கள சமரவீரவின் பிரசாரம் இலக்கையடையும் முன்னரே முறிந்துவிட்ட நிலை ஏற்பட்டது.

மறுபுறத்தில் அரசாங்கமும் - தமிழீழ விடுதலைப்புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட விடயத்தை ஜனாதிபதியின் பிரசாரத்துக்கு விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. படைத்தரப்பையும் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. எனவே, சம்பவம் இலங்கையின் இறையாண்மையைக் காக்கும் வகையிலேயே இடம்பெற்றது. இதில் உயர்மட்ட உத்தரவுகள் அவசியப்படவில்லை என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இதனை மையமாகக்கொண்டே கருத்துரைத்திருந்தார்.

இந்தநிலையில், ஐக்கிய தேசியக் கட்சியும் தமது ஆட்பலத்தை உறுதிசெய்துகொள்ளக் கண்டியில் கூட்டமொன்றை நடத்தியது. இதில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வு, ஐக்கிய தேசிய முன்னணி என்ற அடிப்படையில், அரசாங்கத்தில் அங்கம் வகித்துவரும் அமைச்சர்களான எஸ்.பி. திஸநாயக்க, ஜி.எல்.பீரிஸ் மற்றும் மகிந்த விஜயசேகர போன்றோர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களாகப் பதவியேற்றுக் கொண்டமையாகும். இதனைத் தடுக்க, பொதுஜன ஐக்கிய முன்னணி நீதிமன்றம் மூலம் முயன்ற போதும் அது பலனளிக்கவில்லை. கண்டிக் கூட்டத்தில், பிரதமர் எதிர்பார்த்த சனக்கூட்டம் வருகைதந்திருந்தமை ஐ.தே.முன்னணி அரசாங்கத்தக்கு மீண்டும் புத்துணர்வைக் கொண்டுவந்திருக்கிறது.

எனினும், அரசாங்கத்துக்குத் தொடர்ந்தும் அச்சுறுத்தல்கள் ஒன்றன் பின்னொனறாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. மின்சாரசபை ஊழியர்களின் பணி நிறுத்தம் இதில் ஒன்றாகும். இருந்தாலும், அவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் இதுவரை மின்சார விநியோகங்களில் பாரிய தடங்கல்களை ஏற்படுத்தவில்லை. இது அரசாங்கத்துக்கு நிம்மதியைத் தரும் ஒன்றாகும். ஆனால், எதிர்வரும் ஜூன் மாதம் வரையில், ஆட்சியை தளம்பாமல் கொண்டு செல்ல வேண்டும் என்பதில் அரசாங்கம் முனைப்பாக இருந்துவருகிறது.

இலங்கைக்கு உதவிவழங்கும் ஜப்பானிய மாநாடு இடம்பெற்றால், அதில் கிடைக்கப்பெறும் நிதியைக் கொண்டு ஐக்கிய தேசிய முன்னணி நீண்ட ஆட்சியினை ஏற்படுத்தக்கூடும். எனவே, அதனைத் தடுக்கும் வகையில் ஜூன் மாதத்திற்கு முன்னர் மக்கள் விடுதலை முன்னணியின் உதவியுடன் ஆட்சி அமைப்பது அல்லது நாடாளுமன்றத்தைக் கலைப்பதே ஜனாதிபதியின் நோக்கமாகவிருக்கிறது.

இதற்கிடையில், "பௌத்த பிக்குகளின் தேசிய சங்க சம்மேளனம்" எதிர்வரும் 22 ஆம் திகதி 'சங்க ஆஞ்ரா' என்ற அறிவிப்பைப் பிரகடனப்படுத்தவிருக்கிறது. இலங்கையில் ஒரே நீதிமுறைமை இருக்கவேண்டும். இலங்கை பௌத் நாடு என்பதில் "சங்க ஆஞ்ரா" என்ற சங்கக் கட்டளையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என இந்த அமைப்பு வலியுறுத்தவிருக்கிறது.

# மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் மண் அகழ்வை உடன் நிறுத்துங்கள்!

## அரச அதிபருக்குச் சுற்றுச் சூழல் சங்கம் கடிதம்

வடமராட்சிக் கிழக்கில், மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் மணல் அகழ்வு இடம்பெறுவதால், கடற்பெருக்கின்போது உவர்நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், இப்பகுதி உவர்நிலமாக மாறும்நிலை உருவாகலாம். ஆகவே, கட்டடத் தேவைகளுக்கு மணல் அகழ்வதற்கு வேறிடத்தைத் தெரிவுசெய்யுமாறு வடமராட்சி கிழக்குச் சுற்றுச்சூழல் சங்கம் யாழ். அரசாங்க அதிபரைக் கேட் டுள்ளது.


யாழ்.அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஆய்வாளர்களின் சிபார்சின்படி இன்னும் 800 உழவு இயந்திர மணலே அகழமுடியும். அதற்கு மேல் மணல் அகழமுடியாது. ஆகவே, இதற்குமேல் மணல் அகழ்ந்தால், கடல்நீர் உட்புகுந்து நல்ல நிலங்கள் உவர்நிலமாக மாறிவிடும். இதனால், வயல்நிலங்களெல்லாம் உவர்நிலமாகி, நெற்செய்கை செய்யமுடியாதநிலை ஏற்படும்.

ஆகவேதான், மணல் அகழ்வதற்குப் புதிதாகவொரு இடத்தைத் தெரிவு செய்யுமாறும், அவ்வாறான இடம் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இருப்பதால், அதற்கு அனுமதி பெற்றுத்தருமாறும் கேட்டுக் கொள்கிறோம் என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## காதலே போ::: போ:::


ஷேன் வார்ன் மனைவி சிமோனுடன்

முன்னொரு காலத்திலே கிரிக்கெட் ஆட்டங்களுக்கு வீரர்கள் போவ தென்றால் அவர்களுடைய மனைவிமார்கள், பிள்ளைகள் ஆகியோர்களுடன் செல்வது வழக்கமாக இருந்தது. ஆனால், தற்போது கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கான கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டிருப்பதால், அவர்கள் கிரிக்கெட் ஆட்டமே கதியென்று கிடக்கக் கூடிய அளவிற்கு சட்ட திட்டங்கள் வலுப்பெற்றிருக்கின்றன. இம்முறை உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளிலே, ஒவ்வொரு கிரிக்கெட் அணிவீரர்கள் தங்கும் இடமும் மிகவும் இரகசியமாகக் கண்காணிக்கப்பட்டு வருவதுடன், அவர்களுடைய தொலைபேசி அழைப்புக்கள் எல்லாம் ஒட்டுக்கேட்கப்பட்டு வருவதனை, போட்டி ஏற்பாட்டாளர்கள் மறுதலிக்கவில்லை. கிரிக்கெட் சூதாட்டம், போதைவஸ்துப் பாவனை ஆகியன வெகுவாக மலிந்து காணப்படுகின்ற இன்றைய கிரிக்கெட் உலகிற்கு, இந்தச் சட்ட திட்டங்கள் தேவையானவையாகவே இருக்கின்றன. ஆனால், மனைவி, பிள்ளைகள் ஆகியோரைப் பிரிந்திருக்கின்ற வீரர்கள், எந்தளவிற்கு கட்டுப்பாடாக ஆடுவார்கள் என்பது சொல்லமுடியாத ஒன்றாகவே இருக்கின்றது. இம்முறை உலகக்கிண்ணக் கிரிக்கெட்டில் எல்லா நாட்டு வீரர்களும் குடும்பத்துடன் வந்திருக்கிறார்கள். இதில் என்ன விசேடம் என்றால், வீரர்கள் தங்கள் குடும்பத்தவர்களுடன் தொடர்புகொள்ளமுடியாதவர்களாகவே இருக்கின்றார்கள்.


யூனுஸ் மனைவி பேரியல் யூனுஸ் பிள்ளையுடன் (வலது)

சில ஆட்டக்காரர்கள் இப்பொழுதுதான் புதிதாக மணமுடித்தவர்கள். அவர்களும் தங்கள் மனைவிமாரைப் பிரிந்து மைதானத்தில், கிரிக்கெட்டின் மேல் கொண்ட காதலால் ஆடவந்திருக்கிறார்கள். உண்மையிலேயே இது கிரிக்கெட் வீரர்களுக்கு மட்டுமல்ல, அவர்களுடைய மனைவி, பிள்ளைகளுக்கும் ஒரு மெகா கொண்டாட்டம்தான். இம்முறை கிரிக்கெட் போட்டிகளைக்

## கிரிக்கெட்டே வா... வா...

கண்டு ரசிப்பதற்காக, பெரும்பாலான வீரர்களுடைய குடும்ப அங்கத்தவர்கள் மட்டுமல்ல, காதலிகளும் வந்திருப்பதை தென்னாபிரிக்கச் செய்திகள் ஊர்ஜிதம் செய்கின்றன. சாதாரணமாக இங்கிலாந்து வீரர்களுடைய மனைவிமார்கள், சாதாரண **Test** போட்டிகள் தொடக்கம் ஒருநாள் போட்டிகள் ஒன்றைக்கூட விட்டுவைக்காமல் கணவன்மார்களுடன் களத்தில் குதிப்பவர்கள்.

ஆனால், இம்முறையும் அவர்களுக்கு துரதிர்ஷ்டமே. ஏனெனில், இங்கிலாந்து அணி நேரகாலத்துடன் மூட்டை முடிச்சுகளைக் கட்டியது தான். இப்பொழுது நான்கு அணி வீரர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் பலத்த எதிர்பார்ப்புடன், அரையிறுதி, இறுதிப் போட்டிகளுக்காகக் காத்து நிற்கின்றார்கள். அதிலே சிறப்பாக அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை ஆகிய நாட்டு கிரிக்கெட் வீரர்களுக்கு தென்னாபிரிக்க கால நிலையென்பது ஒரு புதுமையான அனுபவம். பகலில் கடும் வெயில், இரவில் கடும் குளிர். ஆனால், கென்ய நாட்டு வீரர்களை இந்தக் காலநிலை மாற்றங்கள் அவ்வளவு பாதிக்காது. சில வீரர்களுடைய கைக்குழந்தைகளும் தமது தந்தைமார்களுடைய ஆட்டங்களைக் கண்டுகளிப்பதற்காக தென்னாபிரிக்கா நோக்கிப் படையெடுத்திருக்கின்றனர். ஆனால், அவைகள் கடும் வெப்பத்தையும் கடும் குளிரையும் தாங்குமா?

**PLAYERS - WIVES - KIDS.**

- **PN.**சுதர்சன்.

## கிழக்கு வெளுக்கிறது!


சனத், அரவிந்த - வெற்றி நோக்கி

சுப்பர் சிக்ஸ் ஆட்டங்கள் ஒரு கட்டத்துக்கு வந்த போது, மூன்று அணிகளின் விதி தெளிவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அவுஸ்திரேலியா, இந்தியா, கென்யா என்பன இன்னொரு தீக் குளிப்புக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள் என்பதே அது. ஆனால், அரை இறுதியாட்டத்தில் இணையப் போகும் நான்காவது அணி எது என்பதற்குச் சரியான விடை கிடைத்திருக்கவில்லை.

இங்குதான் பிரார்த்தனைகளும், பூஜைகளும் புதிய பரிமாணம் பெற்றன. நியூசிலாந்து எட்டுப் புள்ளிகளுடன் இந்தியாவைச் சந்தித்தபோது இலங்கைக்கு இருந்தது 7.5 புள்ளிகளும், இன்னொரு ஆட்டமும். எனவே, இந்தியா வென்றால் நியூசிலாந்து ஓரளவு **OUT** ஆகும். ஆனால், இலங்கைக்கான இடம் பிரகாசமாகும். எனவே, இலங்கை ரசிகர்கள் எல்லாம் இந்தியா வெல்ல வேண்டும் என்று போட்டா போட்டி போட்டுக் கொண்டு வேண்டுதல்களும் அர்ச்சனைகளும் அமோகமாகச் செய்தார்கள். அவர்களின் பிரார்த்தனைகள் வீண்போகவில்லை. தமது பிரார்த்தனையின் மூலம் ஒரு நம்பிக்கையையும் இலங்கை அணி ரசிகர்கள் பெற்றுக்கொண்டார்கள். அடுத்தது, சிம்பாப்வே - இலங்கை அணிக்கிடையிலான போட்டியில் இலங்கை தோற்றால், 0.5 புள்ளிகள் அதிகம் என்றவாறு நியூசிலாந்து அரை இறுதிப்போட்டிக்குத் தெரிவாகும். எனவே, மீண்டும் பிரார்த்தனை. அது சிம்பாப்வே தோற்க வேண்டும் என்பது. அப்படியானால்தான் இலங்கை நான்காவது இடத்தைப் பெற்று அரை இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும். அப்பிரார்த்தனையின்படியே இலங்கை அணி, சிம்பாப்வே அணியை 74 ஓட்டங்களால் தோற்கடித்து அரையிறுதிக்குள் புகுந்துகொண்டது. இனி இலங்கை அணி அரை இறுதி ஆட்டத்தில் சந்திக்கப் போவது அவுஸ்திரேலிய அணியை.


நியூசிலாந்து - கௌரவமான தோல்வி

இனி அடுத்த கட்டப் பிரார்த்தனைகள் ஆரம்பமாகும். அந்தப் பிரார்த்தனைக்கு ஒவ்வொரு ஆட்டங்களுடன் தெளிவான முடிவுகள் தெரியும். காய்ச்சல் உச்சக் கட்டத்தை அடையும்போது உப கண்டத்தில் மகிழ்ச்சி, சோகம் இரண்டும் கலந்த கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்துத்தான் பாயப்போகிறது. - **நிர்மலன்** -


சிம்பாப்வே Vs இலங்கை ஆட்டத்திலிருந்து

## வடக்கின் மாபெரும் போர்
## வெற்றி தோல்வியின்றி முடிவு

நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய வடக்கின் 97 ஆவது மாபெரும் போர், நேற்றையதினம் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிந்தது.

போட்டி ஆரம்பித்து இரண்டாவது நாளான நேற்றைய தினம், தனது முதலாவது இன்னிங்ஸில் பரி. யோவான் கல்லூரி 137 ஓட்டங்களை கூடுதலாகச் சேர்த்துக் கொண்டது. இதற்கு முன்னதாக, நேற்றுமுன்தினம் 90 ஓட்டங்களுடன் பரி.யோவான் அணி ஆட்டத்தினை நிறைவு செய்திருந்தது. மொத்தமாக 227 ஓட்டங்களுக்கு 7 விக்கெட் என்ற ரீதியில் தனது ஆட்டத்தினை நிறைவு செய்துகொண்டது அவ்வணி.

தொடர்ந்து களமிறங்கிய மத்திய கல்லூரி அணியினர், ஆட்டநேர இறுதியில் 8 இலக்குகளை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

இதில் - றொகான் சிறப்பாக ஆடி 91 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். இவ்வாட்டத்தின் ஆட்டநாயகனாக தனஞ்சயனும் (பரி.யோவான் கல்லூரி), சிறந்த துடுப்பாட்ட வீரராக றொகானும் (மத்திய கல்லூரி), சிறந்த களத்தடுப்பாளராக தினேஸும் (பரி.யோவான் கல்லூரி), சகலதுறை ஆட்டக்காரராக பரி.யோவான் அணித் தலைவர் அகிலனும், சிறந்த பந்து வீச்சாளராக மத்திய கல்லூரி அணித் தலைவர் ரஜீவும் தெரிவாகியிருந்தனர்.

- **எப்.எக்ஸ்.சுதர்சன்** -

## நாளும் ஒரு வினா

**இதுவரையான 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் குறிப்பிடத்தக்க சாதனைகள் எவை?**

**தனிநபர் கூடிய ஓட்ட எண்ணிக்கை - 172, விஷாட் (சிம்பாப்வே)**

**சிறந்த பந்துவீச்சு - 7/15, மக்ரா (அவுஸ்திரேலியா)**

**கூடிய விக்கெட்டுக்கள் - 20, சமிந்த வாஸ் (இலங்கை)**

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### இலங்கை எதிர் சிம்பாப்வே அணி

**இலங்கை அணி**

| | | |
|---|---|---|
| அத்தபத்து | N0t out | 103 |
| ஜயசூரிய | C டைபூ b ஸ்ரீக் | 22 |
| அவிஷ்க | C&b மரில்லியர் | 41 |
| டீ சில்வா | C டைபூ b எர்வின் | 25 |
| சங்கக்கார | C ஜி. பிளவர் b ஸ்ரீக் | 35 |
| ஆர்னல்ட் | C ஜி. பிளவர் b ஹொண்டோ | 01 |
| வாஸ் | N0t out | 11 |
| உதிரிகள் | | 18 |
| 5 விக்கெட் இழப்புக்கு (50 ஓவர்கள்) | | 256 |

**பந்து வீச்சு - சிம்பாப்வே அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| ஸ்ரீக் | 10 | 0 | 40 | 2 |
| பிளிக்நட் | 08 | 0 | 40 | 0 |
| பிரெண்ட் | 02 | 0 | 13 | 0 |
| ஹொண்டோ | 05 | 0 | 36 | 1 |
| ஜி. பிளவர் | 10 | 0 | 44 | 0 |
| மரில்லியர் | 10 | 0 | 43 | 1 |
| கென்யோரி | 02 | 0 | 13 | 0 |
| எர்வின் | 03 | 0 | 24 | 1 |

**சிம்பாப்வே அணி**

| | | |
|---|---|---|
| விஷாட் | b ஜயசூரிய | 43 |
| மரில்லியர் | C ஜயசூரிய b குணரட்ண | 19 |
| பிரெண்ட் | b குணரட்ண | 21 |
| ஏ. பிளவர் | LBW b டீ சில்வா | 38 |
| ஜி. பிளவர் | C&b ஜயசூரிய | 31 |
| டைபூ | b முரளிதரன் | 02 |
| பிளிக்நட் | C டீ சில்வா b பெர்ணான்டோ | 01 |
| எர்வின் | b வாஸ் | 12 |
| ஸ்ரீக் | C அத்தபத்து b ஜயசூரிய | 02 |
| கென்யோரி | N0t out | 01 |
| ஹொண்டோ | b வாஸ் | 00 |
| உதிரிகள் | | 12 |
| சகல விக்கெட இழப்புக்கு (41.5 ஓவர்கள்) | | 182 |

**பந்து வீச்சு - இலங்கை அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| வாஸ் | 9.5 | 0 | 46 | 2 |
| குணரட்ண | 07 | 0 | 33 | 2 |
| டீ சில்வா | 09 | 1 | 36 | 1 |
| முரளிதரன் | 07 | 0 | 22 | 1 |
| ஜயசூரிய | 06 | 0 | 30 | 3 |
| பெர்ணான்டோ | 03 | 0 | 10 | 1 |

இலங்கை அணி சிம்பாப்வே அணியை 74 ஓட்டங்களால் வெற்றிகண்டுள்ளதுடன், அரையிறுதியில் அவுஸ்திரேலியாவுடன் மோதவுள்ளது.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் அனுசரணை**

COMMERCIAL BANK
Our Interest Is In You

Ensure a secure future for your child,
open an ARUNALU MINORS
account with Srilanka's best bank.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



மிட்சுயி ஸ்தாபனத்தின் புதிய படைப்பு
ஹினோடே சிமெந்து
வேலைக்கு முந்தும் - ஜப்பானிய பெயர் !
(சி-684)

# தலைவர் பிரபாவின் பணிப்பை...

அதேசமயம், தமிழ் மக்களுக்கான ஒரு சுயாட்சி அரசு, தமிழீழ சமஷ்டி அரசு உருவாக்கம் பற்றியும், நிதிப் பகிர்வு, வருமானம் பற்றியும் இம்முறை பேசலாம்.

அத்தகைய பிரச்சினைகள் இப்போது எடுக்கப்பட்டாலும், அன்றாட பிரச்சினைகள் பற்றியே இம்முறை கூடுதலாகப் பேசவுள்ளோம்.

## பாதுகாப்பு அமைச்சர் மாரப்பனவுக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளோம்

பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன, 11 ஆம் திகதியிட்டு அனுப்பிய கடிதம் நேற்றுத்தான் கிடைத்தது. இதில் அவர் சர்வதேசக் கடற்பரப்பு என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை.

எந்த இடத்தில் இச்சம்பவம் நடந்தது என்று குறிப்பிடவில்லை. சந்தேகத்திற்கிடமான முறையில் ஒரு கப்பல் நகர்ந்ததாகவும், அதைத் தாம் தடுத்து நிறுத்த முயன்றதாகவும், அப்போது அக்கப்பல் தமது யுத்தக் கப்பல்மீது தாக்குதல் நடத்தியதாகவும், பதில் தாக்குதலை கடற்படை நடத்தி அதை மூழ்கடித்ததாகவும் குறிப்பிட்டு, கடற்படை நடவடிக்கை நியாயமானது என மாரப்பன வலியுறுத்தியிருந்தார். அதற்குப் பதிலாக எமது இயக்கம் அதிகாரபூர்வ கடிதத்தை அனுப்பியுள்ளது.

## இனிமேல் கடுமையான முடிவுகளை எடுக்கவேண்டிய நிலையே ஏற்படும்

பிரதேச ஒருமைப்பாட்டையும் இறையாண்மையையும் பாதுகாக்க, கடற்படை தாக்குதல் நடத்தியதாக அரசு கூறுகிறது. எனினும், இரு தரப்பையும் கட்டுப்படுத்தும் ஒரு ஒப்பந்தம் உள்ளது. இதற்கமையவே நாம் எத்தகைய தாக்குதலும் நடத்துவதில்லை. ஆனால், கடற்படை அப்படி நடக்கவில்லை. தான்தோன்றித்தனமாக கடற்படை நடக்கிறது.

இப்படியான சம்பவங்கள் இனி நிகழ்ந்தால், நாம் பொறுத்திருக்க முடியாது. கடுமையான முடிவுகளை எடுக்கவேண்டிவரும்.

## கண்காணிப்புக் குழுவின் பணி; எமக்கு பூரண திருப்தி உள்ளது!

கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கை எமக்கு திருப்திகரமாக உள்ளது. ஏனெனில், அவர்கள் தம்மால் இயன்றளவு அமைதியை ஏற்படுத்த முயன்றுள்ளனர். எல்லா விடயம் குறித்தும் இருதரப்புடனும் கலந்துரையாடியுள்ளனர்.

எனினும், ஆயுதப்படைகள் தான்தோன்றித்தனமாக நடந்துள்ளனர். புலிகளை மோதலுக்கு இழுக்கும் வகையில் செயற்பட்டுள்ளனர். எம் போராளிகளின் சாவுக்குக் காரணமாக இருந்துள்ளனர். பொறுமையின் எல்லைக்கு எம்மைத் தள்ளினர்.

## ஜனாதிபதியின் பிரதிநிதியாக கதிர்காமர் வருவாராயின் நாம் திரும்பிவிடுவோம்!

கண்காணிப்புக் குழுவினர் இவர்கள் மீது அதிகாரம் செலுத்த முடியாது இருக்கின்றனர். ஏனெனில், இந்தப் படையினர் சந்திரிகாவின் ஆளுகைக்குட்பட்டு, அவரின் கட்டளைக்கு இணங்கவே நடந்துவருகின்றனர். அவரிடம் அதிகாரம் கையில் இருக்கும்வரை, இந்தப் பிரச்சினை தொடர்ந்து இருக்கும். கண்காணிப்புக்குழுவும், பிரதமரணிலும் ஆயுதப்படைகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே உள்ளனர் என்றார்.

பேச்சுக்களில் ஜனாதிபதியின் பிரதிநிதியாக லஷ்மன் கதிர்காமர் வருவாராயின், நாம் திரும்பி வந்து விடுவோம் என கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோது அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டார். (க)

# களுத்துறை கைதிகள் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது!

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில தமிழ் அரசியற் கைதிகள் மேற்கொண்டுவந்த உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

சுமார் 15 நாட்களாக உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுவந்த தமிழ் அரசியற் கைதிகள் நேற்று மதிய உணவை உட்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை சிறைச்சாலைக்குச் சென்று தமிழ் அரசியற் கைதிகளைச் சந்தித்துத் தான் உரையாடிய பின்பு, போராட்டத்தைக் கைவிட அவர்கள் இணங்கியதாக நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

தமிழ் அரசியற் கைதிகள் தொடர்பான வழக்குகளை, அவர்களின் சொந்த இடங்களில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்ற நடவடிக்கை எடுககப்பட்டு வருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி குறிப்பிட்டார்.

அத்துடன், கைதிகள் விடுதலை தொடர்பாக தொடர்ந்து செயற்படப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கப்பல் தாக்குதலை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யலாம்

விடுதலைப் புலிகளின் கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்துக் தாக்கப்பட்டமை தொடர்பாக, புலிகள் - இலங்கை உயர்நீதிமன்றத்தில் அல்லது லண்டனிலுள்ள சர்வதேச கடற்பிராந்திய ஆணைக்குழுவில் அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியுமென -

ஐ.நாவின் முன்னாள் ஆலோசகரும் - அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் துறைமுகங்களில் ஐ.நாவுக்கான சட்ட ஆலோசகராகப் பணியாற்றியவருமான இ.நடராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும்கூறுகையில் - புலிகளின் வர்த்தகக் கப்பல் - இந்துமா சமுத்திரத்திலுள்ள சர்வதேச கடற்பரப்பில் வைத்தே தாக்கப்பட்டுள்ளது. சர்வதேச கடற்சட்டத்திற்கு அமைவாக, ஒரு நாட்டிற்குரிய கடற்பரப்பு 12 மைல்களே. புலிகளின் கப்பல் தாக்கப்பட்டமை, சர்வதேசக் கடற்பரப்பில் எனக் கடற்படையின் அறிக்கை மூலம் தெரியவருகின்றது.

இந்த அடிப்படையில் - கடற்படையினர் சர்வதேச சட்டத்தை மீறியிருக்கின்றனர். எனவே, புலிகள் இது தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

முக்கியமான பொருளாதார அபிவிருத்தி நோக்கங்களுக்காக மாத்திரமே சர்வதேச கடற்பரப்பை நாடுகள் பயன்படுத்த முடியும். எதிரியின் கப்பல், சர்வதேச பொருளாதார கடற்பிராந்தியத்தில் நடமாடினால் கூட அதனை எந்த நாட்டுக் கடற்படையும் தடுக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

### நுண்ணுயிரியல் விரிவுரையாளர் வருகை

லண்டன் பல்கலைக்கழக மருத்துவபீட நுண்ணுயிரியல் விரிவுரையாளர் கலாநிதி ஜோன் ஹோல்ட்டன் நாளை திங்கள் மருத்துவ பீடத்துக்கு வருகை தருகிறார். குடல் சம்பந்தமான நோய் ஆய்வுகளை யாழ். மருத்துவ பீடத்துடன் இணைந்து மேற்கொள்வது குறித்து ஆராயவே அவர் இங்கு வருகிறார். நாளை அவரின் விரிவுரை ஒன்றும் மருத்துவ பீடத்தில் நடைபெறவுள்ளது.

### தப்பியோடிய சிப்பாய் சுட்டுக் கொலை

இராணுவத்தில் இருந்து தப்பியோடிய ஒருவர் நேற்று படையினரால் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ரி - 56 ரகத் துப்பாக்கியுடன் இராணுவத்தில் இருந்து தப்பியோடிய இந்தச் சிப்பாய் - வான் ஒன்றைக்கடத்திச் செல்லும்வேளை, படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## அரசின் கருத்துக்கள்...

வழங்கப்பட்ட தவறான தகவல்களின் அடிப்படையில், விடுதலைப் புலிகளின் கப்பல் போராயுதங்களை எடுத்து வந்ததாக, தங்களின் கருத்துக்கள் அமைந்துள்ளன. எமது கப்பலும் அதில் இருந்த போராளிகளும் கடலில் அழிந்துவிட்ட நிலையில், அவர்களது எந்தக் கருத்தும் இல்லாத நிலையில், கடற்படையினர் இதைத் தமக்கு வாய்ப்பாகக் கொண்டு தம்மிஷ்டப்படி கருத்துத் தெரிவித்துள்ளனர். எமது கப்பல் கப்டன், கடற்படைக்கப்பல் தாக்குதல் நடத்தி தமது கப்பலின் எரிபொருள் தாங்கியை அழித்து எரியூட்டச்செய்ததாக எமக்கு அறிவித்ததைத் தங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

சம்பவம் நடைபெற்ற இடம் குறித்து நாம் தெரிவித்த ஆட்சேபனை குறித்த தங்கள் பதில் எமக்கு ஆச்சரியம் தருகிறது. திருமலையிலிருந்து 220 கடல்மைல் தொலைவில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

சம்பவம் நடைபெற்ற சரியான இடம்குறித்து கடற்படையின் தகவல் முன்பின் முரணாக உள்ளது. இறுதியில் சம்பவம் பொருளாதார வலயத்தின் 185 கடல்மைல் தொலைவில் நடந்ததாகக் கடற்படை கூறுகிறது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் 1.3 சரத்தின்படி, கடற்படை விடுதலைப் புலிகளுடன் போர் நடத்துவது தடுக்கப்பட்டுள்ளது. இவ்விடயத்தை தங்கள் அரசு ஆச்சரியகரமாக கண்டுகொள்ளாது விட்டுள்ளது. அத்துடன், இவ்விடயத்தைக் கையாள கண்காணிப்புக்குழுவின் உதவியைப் பெறவும் கடற்படை தவறியுள்ளதாக தமிழ்ச்செல்வன் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

### நோர்வேயின்...

அமைப்புக்களும் தனிநபர்களும் விமர்சித்து வருகின்றனர். இத்தகையவர்களின் குற்றச்சாட்டு யாதெனில், சமாதான முயற்சி மூலம் நோர்வே தனது வர்த்தகத்தை விரிவுபடுத்துகின்றது என்பதாகும்.

திரை அச்சுக்கலைக்குரிய (ஸ்கிரீன் பிரிண்டிங்) பொருட்கள்

திரை அச்சுக்கலைக்குரிய (ஸ்கிரீன் பிரிண்டிங்) செய்வதற்குத் தேவையான மூலப்பொருட்கள் அனைத்தும் யாழ்ப்பாணத்தில் நியாயமான, சகாய விலையில் தடையின்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவிலும் கொழும்பிலும் பிரசித்திபெற்ற அர்ச்சனா அகடமி - ஸ்கிரீன் பிரிண்டிங் நிறுவனத்தின் முழு அங்கீகாரம் பெற்ற விற்பனையாளராக யாழ்ப்பாணத்தில்

திரு.J.S.A. நிக்சன்

ஆசீர் வணிக நிலையம்

202 A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 021 2222842, தொலைநகல் - 021 2222842

நியமிக்கப்பட்டுள்ளார் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அர்ச்சனா அகடமி & ஸ்கிரீன் திருவனந்தபுரம் , இந்தியா.

(சி-685)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.